# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 26 சுபகிருது வருடம், ஆடி மாதம் 11ஆம் திகதி புதன்கிழமை (27.07.2022) ஹிஜ்ரி - 1443, துல்ஹஜ் - 27, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## அவசரகாலச் சட்டத்திற்கு எதிர்க்கட்சி எதிர்ப்பு; அரசுடன் கூட்டும் இல்லை

02 பக்கம்

## சபை முதல்வராக சுசில் பிரேமஜயந்த

நாடாளுமன்றில் சபை முதல்வராக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை நியமிப்பதற்கு ஆளுங்கட்சி எம்.பிக்கள் தீர்மானித்துள்ளனர்.

சபை முதல்வராகச் செயற்பட்ட தினேஷ் குணவர்தன தற்போது பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் ஆளுங்கட்சியில் இருந்து விலகி, சுயாதீன உறுப்பினராகச் செயற்பட்ட சுசில் பிரேமஜயந்த...

02 பக்கம்

## ஓட்டோக்களைப் பதிவு செய்க; எரிபொருள் கோட்டா அதிகரிப்பு

அமைச்சர் காஞ்சன அறிவிப்பு



02 பக்கம்

## எரிபொருள் விநியோகம்

# ஜூலைக்குப் பின்னர் நிச்சயமற்ற தன்மை!



### இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அபாயச் சங்கு

•யோ.தர்மராஜ்

நாட்டில் அடுத்த மாதம் நடுப்பகுதி வரை தற்போது நிதி செலுத்தப்பட்டுள்ள எண்ணெய்க் கப்பல்களில் கிடைக்கும் எரிபொருளை விநியோகித்து பூர்த்தி செய்ய முடியும். எனினும், அதன் பின்னர் எரிபொருளை பெற்றுக்கொள்வதில் நிச்சயமற்ற நிலைமை காணப்படுவதாக மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய எரிபொருள் நெருக்கடி குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின் உற்பத்தி தவிர்ந்து வாகனங்களுக்கு மாத்திரம் தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு மாதத்துக்கு குறைந்தது 350– 400 மில்லியன் டொலர் தேவையாகும். மின் உற்பத்தியுடன் 550 மில்லியன் டொலர் தேவையாகும். எங்களிடம் கையிருப்பு குறைவாக இருப்பதனால், குறித்த 500 மில்லியன் டொலரை பெற்றுக்கொள்ள ஒரே வழி, இந்தியா அல்லது சீனா ஆகிய நாடுகள் வழங்க வேண்டும். அவ்வாறு அவர்கள் வழங்கினால் இந்த எரிபொருள் நெருக்கடியை தீர்க்க முடியும்.

02 பக்கம்

## ஓகஸ்ட்டில் இடைக்கால பட்ஜெட்

2022ஆம் ஆண்டின் அடுத்த சில மாதங்களுக்கான இடைக்கால வரவு – செலவுத்திட்டத்தை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## மீண்டும் முகக்கவசம் அவசியம்

### சுகாதாரத் தரப்பு அறிவுறுத்தல்



இலங்கையில் மீண்டும் கொரோனா பரவல் அதிகரித்துவரும் நிலையில், பொது இடங்களுக்குச் செல்லும்போதும் பயணத்தின்போதும் முன்னரைப்போல் முகக் கவசத்தை அணியுமாறு சுகாதார அமைச்சு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

02 பக்கம்

## ஓகஸ்ட் முதலாம் திகதியுடன் எரிபொருள் வரிசை குறையும்

### அரசு நேற்று அறிவிப்பு

•யோ.தர்மராஜ்

எரிபொருள் விநியோகத்துக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள QR முறையின் கீழ் எரிபொருளை பெற்றுக்கொள்ள 40 இலட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனவே, ஓகஸ்ட் முதலாம் திகதிக்கு பின்னர் எரிபொருள் வரிசையை குறைப்பதற்கு முடியும் என வலுசக்தி அமைச்சர் அறிவித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும்...

02 பக்கம்

# மக்களின் பிரச்சினைகளை கவனிக்கவென அமைச்சர்கள் சபையில் இருக்கவேண்டும்



### ஜனாதிபதி ரணில் உத்தரவு

•யோ.தர்மராஜ்

எதிர்க்கட்சிகள் கேட்கும் கேள்விகள் மற்றும் மக்களின் பிரச்சினைகளுக்கு பதிலளிப்பதற்காக சபை அமர்வுகள் இடம்பெறும் நாட்களில் அனைத்து அமைச்சரவை அமைச்சர்களும் நாடாளுமன்றத்தில் இருக்கவேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உத்தரவிட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு விளக்கமளிக்கையிலேயே...

02 பக்கம்

## இவ்வருட இறுதிக்குள் எரிவாயு நெருக்கடிக்கு தீர்வு வரும்

### அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல அறிவிப்பு



•யோ.தர்மராஜ்

டிசம்பர் 31ஆம் திகதிக்குள் எரிவாயு நெருக்கடியை முற்றாக நிவர்த்திசெய்வதற்கான நடவடிக்கைகளை லிட்ரோ நிறுவனம் முன்னெடுத்துள்ளதாக வலுசக்தி அமைச்சர் அமைச்சரவைக்கு அறிவித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

02 பக்கம்

## சுங்கம், உள்நாட்டு இறைவரிக்கு புதிய பணிப்பாளர்கள் நியமனம்

### அமைச்சரவை அனுமதி

•யோ.தர்மராஜ்

வருமானம் பெறும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களத்தின் உயர் பதவிகளுக்கு புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாக, டீ.ஆர்.எஸ்.ஹப்பு ஆரச்சி மற்றும் இலங்கை சுங்கத்தின் பணிப்பாளர் நாயகமாக பீ.பி.எஸ்.சி. நோனிஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

02 பக்கம்

## உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் வழக்கின் பொறுப்புக்கூறலில் ரணில் நீக்கப்படுவதா?

### ஆட்சேபித்து மைத்ரி உள்ளிட்டோர் உயர்நீதிமன்றத்தில் மனு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பான வழக்கில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை பொறுப்புக்கூறலில் இருந்து நீக்குவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன நேற்று உயர் நீதிமன்றத்தின் ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு அறிவித்துள்ளார்.

இந்த வழக்கின் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் மேற்படி நிலைப்பாடு, அவரின் சட்டத்தரணி பைசர் முஸ்தபாவினால் உயர்நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்



## உஷ்

நாடாளுமன்றத்தில் இன்று விவாதிக்கப்படவுள்ள அவசரகாலச் சட்டத்தை தோற்கடிக்க எதிர்க்கட்சி இரகசிய காய்நகர்த்தல்களை செய்து வருகிறது.

எப்படியோ ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பில் ரணிலை ஆதரித்தவர்கள் இன்று அவசரகாலச் சட்டத்தையும் ஆதரிப்பார்களா என்பது தெரிந்துவிடும்.

சரியென்றால், அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாக 134 அல்லது அதற்கு அதிகமான வாக்குகள் கிடைக்கவேண்டும். ஆனால், எதிராக பல வாக்குகள் கிடைக்குமாயின் எம்.பிக்கள் பலர் ஏதோ உதவிகளை வாங்கிக்கொண்டுதான் அப்போது ரணிலை ஆதரித்திருப்பார்கள் என்று எடுத்துக்கொள்ளலாம்.

## நாளொன்றுக்கு ரூ. 10 கோடி: வருடமொன்றுக்கு ரூ. 4 ஆயிரம் கோடி

### ரயில்வே நட்டத்தை அறிவித்தார் அமைச்சர்; கட்டண அதிகரிப்புக்கு இதுவே காரணமாம்

•யோ.தர்மராஜ்

பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியிலும் புகையிரத சேவையை முன்னெடுத்துச் செல்வதால் நாளொன்றுக்கு 10கோடி ரூபாவும் ஒரு வருடத்துக்கு 04ஆயிரம் கோடி ரூபாவும் நட்டத்தை சந்திப்பதாலேயே பஸ் கட்டணங்களைவிட கொள்கை ரீதியில் 50வீதம் குறைவான வகையில் புகையிரதக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு தீர்மானம் எடுத்ததாக அமைச்சரவைப் பேச்சாளரும் போக்குவரத்து அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு விளக்கமளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

02 பக்கம்

## சர்வகட்சி ஆட்சியமைப்பதற்கான பேச்சுகள் ஏற்கனவே ஆரம்பம்

### பிரதமர் நியமனத்துடன் தொடங்கப்பட்டதாக கூறுகிறார் பந்துல

•யோ.தர்மராஜ்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாகவும் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தனவை பிரதமராகவும் நியமித்து, சர்வகட்சி அரசாங்கத்துக்கான தொடக்கத்தை ஆரம்பித்துள்ளதால், ஏனைய கட்சிகளுடனும் சர்வகட்சி அரசாங்கம் தொடர்பாக ஜனாதிபதியின் வழிகாட்டலுக்கு அமைய பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் போக்குவரத்து அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு விளக்கமளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..

கோட்டா தலைமறைவாகவில்லையாம்.. தப்பி ஓடேல்லையாம்... பந்துல சொல்லுறார்.. அதுசரி அவர் எப்பக்காணும் உண்மையைச் சொன்னார்?



# பண்டாரநாயக்க சிலைக்கு அருகில் கூடியவர்கள் கைது


உத்தரவை மீறி காலிமுகத்திடல் பண்டாரநாயக்க உருவச்சிலைக்கு அருகில் கூடியிருந்த நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கோட்டை பொலிஸாரினால் இவர்கள் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

காலிமுகத்திடல், பண்டாரநாயக்க உருவச்சிலைக்கு அருகிலிருந்து 50 மீற்றர் தூரம் வரையிலான பிரதேசத்தில் எவரும் உட்புகாத வகையில், கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

எனினும், அந்த உத்தரவையும் மீறி அந்த உருவச் சிலைக்கு அருகில் கூடியிருந்த நபர்கள் கோட்டை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டபோது, ஆர்ப்பாட்டக்காரர்களுக்கிடையில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. அதற்கமைய, கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஜனாதிபதி ரணிலை வாழ்த்தினார் மோடி


प्रधान मंत्री
Prime Minister
श्रावण 3, शक संवत् 1944
July 26, 2022

Excellency,

I extend my congratulations to you on your election as the 8th President of Sri Lanka.

You have assumed the high office at a critical time for Sri Lanka. I hope your tenure will nurture economic stabilization as well as fulfil the aspirations of all citizens of Sri Lanka.

As a close friend and neighbour of Sri Lanka, India will continue to be supportive of the quest of the people of Sri Lanka for stability and economic recovery, through established democratic means, institutions and constitutional framework.

I look forward to working closely with you for the mutual benefit of our people as also for further strengthening the age-old, close and friendly relations between our two countries.

I wish Your Excellency a successful term in office.

Please accept, Excellency, the assurances of my highest consideration.

(Narendra Modi)

H.E. Mr Ranil Wickremesinghe,
President
Democratic Socialist Republic of Sri Lanka

அரசியலமைப்பு கட்டமைப்பின் மூலம், ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார மீட்சிக்கான இலங்கையின் முயற்சிகளுக்கு இந்தியா தொடர்ந்தும் உறுதுணையாக இருக்கும்.

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பியுள்ள வாழ்த்துக் கடிதத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார் .

# நாட்டில் குரங்கு அம்மை பரவும் அபாயம் இல்லை

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

குரங்கு அம்மை நோயானது நாட்டில் அதிகளவில் பரவக்கூடிய அபாயம் இல்லையென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சில வலய நாடுகளில் மாத்திரமே குரங்கு அம்மை தொற்றாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக்க சந்திரகுப்த தெரிவித்தார். நோய்த்தொற்றுப் பரவல் தொடர்பில் உலக நாடுகளுடன் இணைந்து முழுமையான கவனத்தை செலுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

நாட்டில் குரங்கு அம்மை தொற்றுப் பரவும் அபாயம் ஏற்படுமாயின், தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் இணக்கம் தெரிவித்துள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

### எரிபொருள் விநியோகம்...

எனினும், அது கிடைக்குமா, கிடைக்காதா? என்பது நிச்சயமற்ற நிலைமையாகும். ஆனால், நாங்கள் கோரிக்கை விடுத்துள்ளோம். கிடைக்குமா என்பதை உறுதியாகக்கூற முடியாதுள்ளது. ஒருவேளை, அவ்வாறு கிடைக்காவிட்டால் அது மிக பாரதூரமானதாகும். கிடைக்கவில்லை என்றால், எங்களிடமுள்ள கையிருப்பு முற்றாக தீர்ந்துவிடும். அடுத்த மாத நடுப்பகுதி வரை தற்போது செலுத்தப்பட்டுள்ள பணத்துக்கான எரிபொருள் எமக்கு கிடைக்கும். அதன் பின்னர் எவ்வாறு எமக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வது என்பது தற்போது வரை நிச்சயமற்ற நிலையில் இருக்கின்றது.

இதுவரை, நாங்கள் மூன்று டீசல் கப்பலுக்கும் இரு பெற்றோல் கப்பலுக்கும் பணம் செலுத்தியுள்ளோம். பணம் செலுத்தி முடிந்துள்ளதால் அந்த கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளன. பணம் செலுத்தியுள்ள குறித்த கப்பல்களே தற்போது வருகை தந்துகொண்டிருக்கின்றன.

கடந்த நாட்களில் நாட்டில் எரிபொருள் இருக்கவில்லை.

ஆனால், தற்போது பெற்றோல், டீசல் கிடைக்கப்பெறுகின்றன. கிடைக்கப்பெறும் தொகைகளுக்கு நாங்கள் பணம் செலுத்தியுள்ளோம். அது போதுமானது. எனினும், முற்றாக தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முடியாது. பற்றாக்குறையுடன் அடுத்த மாதம் வரை எரிபொருள் கிடைக்கும் நிலைமை காணப்படுகின்றது.

இந்தியா அல்லது சீனா எமக்கு ஒரு பில்லியன் டொலர் தருவதாக இருந்தால் அடுத்த மூன்று மாதத்திற்கு எவ்வித தட்டுப்பாடுமின்றி எரிபொருளை வழங்க முடியும். எனவே, எங்களுக்கு நிதி கிடைத்தால் எரிபொருள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முடியும். இல்லையேல், எரிபொருள் தட்டுப்பாடு தொடரும் - என்றார்.

### ஓகஸ்ட்டில் இடைக்கால...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (26) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு விளக்கமளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அனைத்து அமைச்சுகளினதும் ஒதுக்கீடு தொடர்பான திருத்தங்கள் நிறைவடைந்துள்ளன. இதன்படி அடுத்த சில மாதங்களுக்கான இடைக்கால வரவு – செலவுத்திட்டம் அடுத்த மாதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

### இவ்வருட இறுதிக்குள்...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (26) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு விளக்கமளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் விநியோகத்தை முறையாகவும் தடையின்றியும் முன்னெடுப்பதற்காக ஆலோசகர்கள் குழுவொன்றை நியமிப்பதற்கு வலுசக்தி அமைச்சரினால் அமைச்சரவைப்பத்திரம் முன்வைக்கப்பட்டது.

இந்நிலையில், பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்வதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

அதன்படி, டிசம்பர் 31ஆம் திகதிக்குள் எரிவாயு நெருக்கடியை முற்றாக நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை லிட்ரோ நிறுவனம் முன்னெடுத்துள்ளதால், அடுத்த மாதம்முதல் வரிசைகளின்றி எரிவாயுவை பெற்றுக்கொள்வதற்காக தடையின்றி எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்படுமென அமைச்சரவைக்கு அறிவித்தார்.

அதேபோன்று, மின்வெட்டையும் 3 மணி நேரமாக குறைக்கப்பட்டுள்ளது – என்றார்.

### மக்களின் பிரச்சினைகளை...

அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் அதியுயர் சபையாகவுள்ள நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கேட்கும் மற்றும் மக்களின் பிரச்சினைகளுக்கு பதிலளிப்பதற்காக சபை அமர்வுகள் இடம்பெறும் நாட்களில் அனைத்து அமைச்சரவை அமைச்சர்களும் நாடாளுமன்றத்தில் இருக்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

அமைச்சர்களிடம் முன்வைக்கும் பிரச்சினைகளுக்கு சபை முதல்வரினால் பதிலளிக்கக்கூடாது என்பதோடு, உரிய அமைச்சரினாலேயே பதிலளிக்கப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

எனவே, எதிர்காலத்தில் மக்களின் பிரச்சினைகளுக்கு உரியநேரத்தில் பதிலளிப்பதற்கும் ஒழுக்கமான நாடாளுமன்றத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும் ஆளுந்தரப்பு முழு ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார் - என்றார்.

### சபை முதல்வராக...

கடந்த 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதி வாக்கெடுப்பில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக ஏற்கனவே பகிரங்கமாக அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### மீண்டும் முகக்கவசம்...

நாட்டில் மீண்டும் கொவிட்-19 பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதனால் கொவிட் பரவுவதைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் என சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூக விலகல் மற்றும் கைகளை கழுவுதல் போன்ற சுகாதார நடவடிக்கைகள் தொடர்ச்சியாக பின்பற்றப்பட வேண்டும் என அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துவருவதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இதுவரையில் 16 ஆயிரத்து 537 பேர் கொவிட்-19 தொற்றினால் மரணித்துள்ளனர்.

இந்நிலையில், தொற்றுறுதியான 740 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளிலும் வீடுகளிலும் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

### அவசரகாலச் சட்டத்திற்கு...

அரசுடன் எந்த வகையிலும் கூட்டுச் சேராதிருக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது .

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டம் மற்றும் செயற்குழுக் கூட்டம் என்பன நேற்று (26.07.2022) கூடி பின்வரும் முடிவுகளை எட்டின.

கருத்துத் தெரிவிக்கும் உரிமை, போராட்டம் நடத்துவதற்கான உரிமை மற்றும் மக்கள் அன்றாடம் சந்திக்கும் பிரச்சினைகளுக்கு எதிராக போராட்டம் நடத்தும் உரிமைகளை ஒடுக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டத்திற்கு எதிராக வாக்களிக்க இதன்போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

மக்கள் பிரச்சினைகளுக்கு உண்மையான தீர்வுகளை வழங்காமல் அரச பயங்கரவாதத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் கட்டவிழ்த்துவிடும் அடக்குமுறை அரசாங்கத்துடன் கூட்டுச் சேராதிருப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பில் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாக நாடாளுமன்றத்தில் குழு முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டால், அதற்கு ஆதரவளிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

### சர்வகட்சி ஆட்சியமைப்பதற்கான...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வகட்சி அரசாங்கத்துக்கான ஆரம்பத்தை முன்னெடுத்துள்ளோம். அதன்படி, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகவும் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தனவை பிரதமராகவும் நியமித்துள்ளோம்.

பொதுஜன ஐக்கிய முன்னணி உள்ளிட்ட ஏனைய கட்சிகளுடனும் சர்வகட்சி அரசாங்கம் தொடர்பாக ஜனாதிபதியின் வழிகாட்டலுக்கமைய பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனவே, பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வைப் பெறவேண்டுமாயின் சர்வகட்சியின் இணக்கப்பாடு தேவையாகும். சர்வகட்சி அரசாங்கம் பேச்சுவார்த்தை மட்டத்திலேயே இருக்கின்றது. தற்போது நியமிக்கப்பட்டுள்ள 18 அமைச்சர்களும் தற்காலிக அமைச்சரவையாகும்.

சர்வகட்சி அரசாங்கத்தின், அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு குறித்து அமைச்சரவையில் பேசப்படவில்லை. எனினும், எந்தவொரு நடவடிக்கையும் அரசியலமைப்புக்கு அமையவே முன்னெடுக்கப்படும். அதன்படி, உரிய நேரத்தில் அரசிலமைப்புக்கமைய அமைச்சரவை மாற்றங்கள் இடம்பெறும் - என்றார்.

### சுங்கம், உள்நாட்டு...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (26) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு விளக்கமளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம் வருமானம் சேகரிக்கும் பிரதான மூன்று நிறுவனங்களாகவுள்ளன. இந்த மூன்று நிறுவனங்களில் கிடைக்கும் வருமானத்திலேயே நாடு முற்றாக இயங்கவேண்டியுள்ளது.

எனவே, இலங்கைக்கு நாளொன்றுக்கு 400 கோடி ரூபாவே வருமானமாக கிடைக்கின்றது. ஆனால், மீண்டும் வரும் செலவு உள்ளிட்டு நாளொன்றுக்கு ஆயிரம் கோடி ரூபா செலவாகின்றது. அவ்வாறாயின் ஒவ்வொருநாளும் 600 கோடி ரூபாவை கடனாகப் பெறவேண்டியுள்ளது. இதற்காக, கடந்த காலம் தொடக்கம் பெற்ற கடன்களையே இன்று மீள செலுத்த முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். எனவே, நாட்டின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் செலவுகளை குறைப்பதற்கும் அரசாங்கத்தின் நிதி நிர்வாகம் மிக முக்கியமான ஒன்றாக இருக்கின்றது.

எனவே, அரசுக்கு வருமானம் கிடைக்கும் மூன்று பிரதான நிறுவனங்களாகவுள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாக டீ.ஆர்.எஸ்.ஹப்புஆரச்சியை நியமிப்பதற்கான அமைச்சரவைப்பத்திரத்தை ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க முன்வைத்தார்.

அதேபோன்று, இலங்கை சுங்கத்தின் பணிப்பாளர் நாயகமாக பீ.பி.எஸ்.சி. நோனிஸை நியமிப்பதற்கு அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்பட்டு, அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக ஜூட் நிலுக்சான் நியமிக்கப்பட்டுள்ளதுடன், திறைசேரியின் பிரதி செயலாளராக டபிள்யூ.ஏ.சத்குமார நியமிக்கப்பட்டுள்ளார் - என்றார்.

### உயிர்த்த ஞாயிறு தினத்...

இது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட மனு, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்கள் புவனேக்க அலுவிஹாரே, பிரியந்த ஜயவர்தன, எல். டி. பி.தெஹிதெனிய, முர்து பெர்னாண்டோ, எஸ்.துரைராஜா மற்றும் காமினி அமரசேகர ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் நேற்று (26) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சார்பில் ஆஜரான சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ, பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக அரசியலமைப்புச் சட்டத்தின்படி வழக்குத் தொடர முடியாது எனத் தெரிவித்தார்.

இதன்படி, எதிர்மனுதாரர்கள் அனைவரும் தங்கள் நிலைப்பாட்டை முன்வைக்க அவகாசம் அளிக்கப்படும் என்று கூறிய உயர்நீதிமன்றம், இந்த மனுக்களை ஆராய இன்று புதன்கிழமை கூடவேண்டுமெனவும் தீர்மானித்தது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், ஈஸ்டர் ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதலில் காயமடைந்த மற்றும் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் கத்தோலிக்க பாதிரிமார் உள்ளிட்ட 12 தரப்பினரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் பிரதானி நிலந்த ஜயவர்தன, தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் சிசிர மெண்டிஸ் ஆகியோர் இதில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

### நாளொன்றுக்கு ரூ.10 கோடி...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆரம்பத்திலிருந்து இலாப, நட்டம் இல்லாத சேவையாக புகையிரத சேவையை முன்னெடுத்து வந்தாலும் புகையிரத செலவுகள் மோசமாக அதிகரித்தமையினால், செலவுகளுக்கேற்ப வருமானங்கள் அதிகரிக்காதமையினால் புகையிரத சேவை பாரிய நட்டத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு புகையிரதத் திணைக்களத்தின் வருமானம் 4.8 பில்லியன் டொலராகவும் நட்டம் 34 பில்லியன் டொலராகவும் காணப்பட்டன. நட்டம் மாத்திரம் 30 பில்லியன் டொலராகும். அதேபோன்று, 2021ஆம் ஆண்டு 4.5 பில்லியன் டொலராகவும் நட்டம் 44 பில்லியன் டொலராகவும் காணப்படுகின்றன. 2022ஆம் ஆண்டு வருமானம் 2.6 பில்லியன் டொராகவும் நட்டம் 37 பில்லியன் டொலராகவும் காணப்படுகின்றன. அதாவது, 3 ஆயிரத்து 700 கோடி ரூபாவாகும்.

சாதாரணமாக ஒரு வருடத்திற்கு 4 ஆயிரம் கோடி ரூபாவரை புகையிரதத் திணைக்களம் நட்டத்தை சந்திக்கின்றது. இந்த நட்டத்தினால் அதிகாரிகளுக்கு எவ்வாறு சம்பளம் வழங்குவது, எரிபொருளை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்ற பிரச்சினை உள்ளது. எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியாவிட்டால், யார் இருந்தாலும் புகையிரத சேவை இயங்காது.

இவ்வாறான நிலையில், புகையிர சேவையை முன்னெடுத்துச் செல்வதால் நாளொன்றுக்கு 10 கோடி ரூபா நட்டமாகும். இதனை பொதுமக்களே சுமக்கவேண்டியுள்ளது. 2022ஆம் ஆண்டு 2.6 பில்லியன் டொலர் வருமானம் பெறும்போது, புகையிரதத் திணைக்கள அதிகாரிகளுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுக்காக 7.8 பில்லியன் டொலரும் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான நட்டத்துக்கு மத்தியில் எவ்வாறு இந்த சேவையை முன்னெடுத்துச் செல்வது?

எனவே, புகையிரத சேவையை மக்கள் சேவையாக தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதோடு, எரிபொருள் விலை அதிகரித்தபோது, முச்சக்கரவண்டி, பஸ், பாடசாலை வேன், கப்பல் மற்றும் விமானக் கட்டணங்கள் அதிகரித்தபோது, புகையிரத கட்டணத்தை மாத்திரம் அதிகரிக்காது எவ்வாறு சேவையை முன்னெடுத்துச் செல்ல முடியும். எனவே, பஸ் கட்டணங்களை விட கொள்கை ரீதியில் 50 வீதம் குறைவான வகையில் புகையிரத கட்டணத்தை அதிகரிப்பதற்கு தீர்மானம் எடுத்தோம் - என்றார்.

### ஓகஸ்ட் முதலாம் திகதியுடன்...

அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இதேவேளை, ஆசிரியர்கள், சுகாதாரத் துறையினர் உள்ளிட்ட அனைத்து துறையிலுள்ளவர்களுக்கும் தேவையான எரிபொருள் தொடர்பான தகவலை உரிய அமைச்சு இரு நாட்களில் முன்வைக்க வேண்டுமென அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (26) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு விளக்கமளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் எரிபொருளுக்கு பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு 2.7 பில்லியன் டொலரே செலவழிக்கப்பட்டுள்ளது. ஆனால், 2022ஆம் ஆண்டுக்கு கடந்த வருடங்களைபோன்றே எரிபொருளுக்கான கேள்வி இருந்தாலும் அதற்காக, மதிப்பிடப்பட்டுள்ள செலவானது 6.7 பில்லியன் டொலராகும். 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, தற்போது 4 பில்லியன் டொலரினால் எரிபொருளுக்கான இறக்குமதி செலவு அதிகரித்துள்ளது. 4 பில்லியன் டொலர் என்பது எங்களைபோன்ற சிறிய நாட்டுக்கு சமாளிக்க முடியாததாகும்.

குறிப்பாக, அம்பாந்தோட்டை துறைமுகம் விற்பனையின் மூலம் 1.4 பில்லியன் டொலரும் கொழும்பு துறைமுக நகரத்தின் ஊடாக 1.4 பில்லியன் டொலருமே பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, துறைமுகம் மற்றும் துறைமுக நகரம் என இரண்டுமே 2.8 பில்லியன் டொலரே பெறுமதியானவை. ஆனால், எரிபொருள் இறக்குமதிக்காக 4 பில்லியன் டொலர் அதிகம் செலுத்தவேண்டியுள்ளது. இது நாட்டுக்கு சமாளிக்கவே முடியாத நிலைமையாகும்.

இவற்றை கருத்திற்கொண்டே, எரிபொருள் விநியோகத்துக்காக வலுசக்தி அமைச்சினால் கிவ்ஆர் முறைமை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த கிவ்ஆர் முறைமையில் இதுவரை 40 இலட்சம் வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. எனினும், கிவ்ஆர் முறைமையில் நேற்று (நேற்றுமுன்தினம்) மாத்திரம் 245 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 70 ஆயிரத்து 123 வாகனங்கள் எரிபொருளை பெற்றுக்கொண்டுள்ளன. ஓகஸ்ட முதலாம் திகதிக்குப் பின்னர் எரிபொருள் வரிசையை குறைப்பதற்கு முடியும் என வலுசக்தி அமைச்சர் அமைச்சரவைக்கு அறிவித்தார்.

முதலாம் திகதிக்குப் பின்னர் கிவ்ஆர் முறைமை முழுமையாக அமுல்படுத்தப்பட்டாலும் புதிய முறை என்பதால் சிறு சிறு தவறுகள் இருக்கக்கூடும். எனினும், அவற்றை நிவர்த்தி செய்துகொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். தொழில்நுட்ப முறையிலேயே அதிக விலைக்கு விற்பனை செய்வதையும் தடுக்க முடியும்.

இதேவேளை, ஆசிரியர்கள் மற்றும் வைத்தியர்களுக்கு எரிபொருள் விநியோகிப்பது குறித்து அமைச்சரவையில் பேசப்பட்டது. எனினும், இவர்களை வகைப்படுத்தி எரிபொருள் விநியோகத்தை முன்னெடுத்தால் அது பாரிய குழப்பதை ஏற்படுத்தும். எனவே, ஓகஸ்ட் முதலாம் திகதிக்குப் பின்னர் உரிய அமைச்சினால் உரிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, சுகாதாரத்துறையில் அந்தந்த பகுதியிலுள்ளவர்களுக்கு தேவையான எரிபொருள், வாகன இலக்கம் என்பற்றை சுகாதார அமைச்சும் கல்வித்துறையிலுள்ளவர்களுக்கு தேவையான எரிபொருளை கல்வி அமைச்சும் முன்வைக்க வேண்டும் என்பதோடு, ஏனைய அமைச்சுகளும் அவ்வாறான தகவலை இரு நாட்களுக்குள் முன்வைக்க வேண்டும். எனினும், இவர்களுக்கும் கிவ்ஆர் முறைமையிலேயே எரிபொருள் வழங்கப்படும் - என்றார்.

### ஓட்டோக்களை பதிவுசெய்க:...

யோ.தர்மராஜ்

முச்சக்கரவண்டி சாரதிகள் ஓகஸ்ட் முதலாம் திகதிக்கு முன்னர் தங்களுடைய பகுதிக்கு பொறுப்பான பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்து தங்களுக்கு எரிபொருள் பெறுவதற்கான எரிபொருள் நிரப்பு நிலையமொன்றை உறுதி செய்துகொள்ளுமாறு மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கோரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சர் காஞ்சன தனது உத்தியோகபூர்வ டுவிட்டரில் பதிவிட்டுள்ள பதிவொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முச்சக்கரவண்டி சாரதிகள் தங்களுடைய பகுதிக்குப் பொறுப்பான பொலிஸ் நிலையத்தில் பதிவுசெய்து தங்களுக்கு எரிபொருள் பெறுவதற்கான எரிபொருள் நிரப்பு நிலையமொன்றை உறுதி செய்துகொள்ள வேண்டும். எதிர்வரும் ஜூலை மாதம் 31ஆம் திகதிக்கு முன் முச்சக்கரவண்டி சாரதிகள் இவ்வாறு பதிவு செய்துகொள்ள வேண்டும்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் பொலிஸ் நிலையத்தில் பதிவுசெய்யப்பட்டு ஒதுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மாத்திரமே பதிவுசெய்யப்பட்ட முச்சக்கரவண்டிகளுக்கு எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும்.

இதேவேளை, விவசாய உபகரணங்கள், ஜெனரேட்டர்கள் மற்றும் எரிபொருள் தேவைப்படும் ஏனைய உபகரணங்களைப் பயன்படுத்துவோர், தங்களுக்குத் தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக அந்தந்த பிரதேச செயலகங்களில் பதிவு செய்துகொள்ள முடியும். எரிபொருள் தேவையை கொள்வனவுசெய்வதற்கு எரிபொருள் நிரப்பு நிலையமொன்றை பரிந்துரைக்கும்போது, தனிநபர்களின் வாராந்த எரிபொருள் தேவை தொடர்பான தகவல்களுடன் பதிவுசெய்து, ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தை உறுதிசெய்து கொள்ளமுடியும்.

இதேவேளை, செஸி எனப்படும் அடிச்சட்ட வாகன இலக்கம் மூலம் கிவ்ஆர் முறைமையை பதிவு செய்யமுடியாத வாகன உரிமையாளர்கள், எதிர்வரும் வெள்ளிக்கிழமைமுதல் வாகன வருமான வரி அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்தி, தங்களுடைய வாகனங்களை பதிவு செய்துகொள்ள முடியும் - எனவும் அவர் டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போக்கள், தெரிவுசெய்யப்பட்ட எரிபொருள் நிலையங்கள் ஊடாக பயணிகள் போக்குவரத்து பஸ்களுக்குத் தேவையான எரிபொருள் விநியோகிக்கப்படுவதாக வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதாரம், விவசாயம், மீன்பிடி, சுற்றுலா, கைத்தொழில் உள்ளிட்ட ஏனைய துறைகளுக்குத் தேவையான எரிபொருளை பெறுவதற்கான பதிவுகள் ஒவ்வொரு அமைச்சினாலும் அனுமதிக்கப்படுமென வலுசக்தி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வானகங்களுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கிவ்ஆர் முறைமையின் கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து வகையான வாகனங்களுக்கான வாராந்த பெற்றோல் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மோட்டார்சைக்கிள் 4 லீற்றர், முச்சக்கரவண்டி 5 லீற்றர், வேன் 20 லீற்றர், கார் 20 லீற்றர், பஸ் 40 லீற்றர், இதர வாகனங்கள் 15 லீற்றர் மற்றும் லொறி 50 லீற்றர் என எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

# கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் அதற்கேற்ப மரணங்களும் நிகழும்

## தொற்று நோய்ப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சமித எச்சரிக்கை



நாட்டில் கடந்த சில தினங்களாக கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அண்ணளவாக அதிகரித்துள்ளது. இவ்வாறு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டால், மீண்டும் நோயாளர்களின் எண்ணிக்கைக்கேற்ற மரணங்களையும் சந்திக்கக்கூடியதாக இருக்கு மென தொற்று நோய்ப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சமித கினிகே தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போதுள்ள கொரோனா நிலைமை குறித்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக மட்டத்தில் கடந்த இரண்டு, மூன்று வாரங்களில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் தெளிவான அதிகரிப்பை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. அதேபோன்று, ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்க நாடுகளிலும் அதிகரிப்பை அவதானிக்க கூடியதாகவுள்ளது. அதேபோன்று தெற்காசிய நாடுகளிலும் தற்போது கொரோனா நிலைமை அதிகரித்து வருகின்றது.

எமது நாட்டிலும் அண்ணளவான அதிகரிப்பை கணிப்பிடக்கூடியதாக இருக்கிறது. கடந்த மே மற்றும் ஜூன் மாதங்களில் நாளாந்தம் 15 முதல் 20 வரையிலான நோயாளர்கள் பதிவாவதையே அவதானிக்கக்கூடியதாக இருந்ததது. இந்த நிலைமையை கடந்த ஒன்றரை மாதங்கள் சீராக பேணக்கூடியதாக இருந்தது. ஆனால், கடந்த இரு வாரங்களில் அண்ணளவான நோயாளர்கள் அதிகரித்துள்ளதுடன், நாளாந்தம் 50 பேருக்கு அதிகமான கொரோனா நோயாளர்கள் அடையாளங்காணப்படுகின்றனர். சில சந்தர்ப்பங்களில் 60 - 70இற்கும் அதிகமான நோயாளர்கள் அடையாளங்காணப்படுகின்றனர்.

கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது எமது நாட்டிலும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதற்கு மேலதிகமாக உலக நாடுகளில் ஓமிக்ரோனின் புதிய திரிபு அதிகரித்துள்ளமையும் பதிவாகியுள்ளது. இந்த விடயங்களை கவனத்திற்கொண்டால் எமது நாட்டிலும் மீண்டும் கொரோனா பரவுவதற்கான நிலை காணப்படுகின்றது. நாடென்ற அடிப்படையில் கடந்த காலங்களில் எமது நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவந்த சீரான நிலைமைகளை அவ்வாறே முன்னெடுத்துச் செல்லவேண்டிய அவசியம் இருக்கிறது.

நோயாளர்களின் எண்ணிக்கை ஓரளவுக்கு மேல் அதிகரித்தால் அதற்கு சமமான அளவு மரணங்களும் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இதனை கடந்த காலங்களில் நாம் அவதானித்திருந்தோம். கடந்த ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களில் கொரோனா மரணங்களில் பாரிய வீழச்சி ஏற்பட்டிருந்தது. ஆனால், கடந்த 10 நாட்களை எடுத்துக்கொண்டால் நாளாந்தம் கொரோனா மரணங்கள் பதிவாகும் நிலைமையை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது - என்றார்.

# சப்ரகமுவ மாகாண தமிழ்மொழி விழா

சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம் இணையவழியில் தமிழ்மொழித்தின விழாவை நடத்த திட்டமிட்டுள்ளது. இவ்விழாவானது நாளை மறுதினம் (29ஆம் திகதி) இணைய வழியில் இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் காலை 9.00மணிக்கு இடம்பெறவுள்ள இந்திகழ்வை www.enenapiyasa.lk எனும் இணையத்தளத்தில் நேரிடையாக பார்வையிடலாம். சப்ரகமுவ மாகாணத்தில் காணப்படும் ஏழு வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகள் இந்நிகழ்நிலை விழாவில் கலந்துகொள்கின்றன.

இதன்போது பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளாக இசையும் அசைவும், பேச்சு, பரதநாட்டியம், கோலாட்டம், கரகாட்டம், இசை தனி, குழு, நாடகம் எனவும் இன்னும் பல சுவையான அம்சங்களும் இடம்பெறவுள்ளன.

மாகாண கல்விப்பணிப்பாளர் குரூப் ஆராச்சியின் தலைமையிலும் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சகுந்தலா மனோகரனின் நெறிப்படுத்தலிலும் மாகாண இ-நெனபியச தொழில்நுட்பக் குழுமத்தின் முழுமையான ஒத்துழைப்புடனும் இடம்பெறவுள்ளது.

# ஜனாதிபதி மாளிகையின் தொல்பொருள் சேதம் தொடர்பில் இன்று விசாரணை

ஜனாதிபதி மாளிகையிலுள்ள தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களை சேதமாக்கியமை தொடர்பில் இன்றைய தினம் (27) விசாரணை நடத்தப்படும் என தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விசாரணைகளுக்காக மேல் மாகாண பிராந்திய அலுவலக அதிகாரிகளைக்கொண்ட விசேட குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்க தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

ஜனாதிபதி மாளிகையின் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சேதங்கள் தொடர்பிலான விசாரணைகள் இதுவரை நிறைவுசெய்யப்படவில்லை. சேத மதிப்பீட்டு நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, சேத மதிப்பீடுகள் தொடர்பில் பரப்பப்படும் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை.

அதற்கமைய, ஜனாதிபதி மாளிகையில் தொல்பொருள் ஆய்வுகளை மேற்கொண்டதன் பின்னர், சேத விபரங்கள் தொடர்பில் தயாரிக்கப்படும் அறிக்கையானது ஜனாதிபதியின் செயலாளர், பொலிஸார் மற்றும் ஏனைய பாதுகாப்புப் பிரிவினரிடம் கையளிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மட்டு. வாழைச்சேனையில் இரு வீடுகளை உடைத்து பணம், தங்க நகைகள் கொள்ளை

*(கனகராசா சரவணன்)*

மட்டு. வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள ஓட்டமாவடி பிரதேசத்தில் உள்ள இரு வீடுகள் உடைக்கப்பட்டு ஒரு இலட்சத்து 74 ஆயிரம் ரூபா பணம், 6 பவுண் தங்க நகைகளை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் நேற்று (26) அதிகாலையில் இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டமாவடி 2ஆம் பிரிவு சந்தை வீதியிலுள்ள வீடொன்றில் வீட்டைப் பூட்டிவிட்டு வீட்டில் அனைவரும் நித்திரையில் இருந்தபோது, அதிகாலை 2.45 மணியளவில் வீட்டின் யன்னலை உடைத்துக்கொண்டு, உள்நுழைந்த கொள்ளையர்கள், வீட்டின் அலுமாரியில் இருந்த 6 பவுண் தங்கநகையை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

அதேவேளை இந்த கொள்ளை சம்பவம் இடம்பெற்ற வீட்டிலிருந்து சுமார் 100 மீற்றர் தூரம் கொண்ட பிஇஎச் குறுக்கு வீதியிலுள்ள வீடொன்றில் அதிகாலை 3.30 மணிக்கு யன்னலை உடைத்து உள்நுழைந்து, அங்கிருந்த ஒரு இலட்சத்து 74 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதுதொடர்பாக ஆராய்வதற்காக தடயவியல் பிரிவு பொலிஸார் வரவழைக்கப்பட்டதுடன், வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு தீர்க்கமான முடிவுகள் அவசியம்

## பொருளாதார நிபுணர்களுடனான சந்திப்பின்போது தூதுவர் ஜூலி சங் தெரிவிப்பு



நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கும், மக்களுக்கான நிவாரணத்தைப் பெற்றக்கொடுக்கவும் தீர்க்கமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது அவசியமென இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மற்றும் பொருளாதார நிபுணர்கள், கொள்கை நிபுணர்கள் குழுவுக்கு இடையிலான சந்திப்பு நேற்று (26) கொழும்பில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பு தொடர்பில் தூதுவர் குறிப்பிட்டுள்ளதாவது,

பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கவும் இலங்கை மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் தீர்க்கமான நடவடிக்கை அவசியம். முன்னோக்கி செல்லும் பாதை மற்றும் பரந்த அடிப்படையிலான, நிலையான பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்த தேவையான அவசர சீர்திருத்தங்கள் குறித்து விவாதிப்பதற்காக இலங்கையின் பொருளாதார நிபுணர்கள் மற்றும் கொள்கை நிபுணர்கள் குழுவை சந்தித்துக் கலந்துரையாடினேன் - என்று குறிப்பிட்டுள்ளார்.






தமிழக அரசின் நன்கொடையான 3.4 பில்லியன் ரூபா பெறுமதியான 40,000 மெட்ரிக் தொன் அரிசி, 500 மெட்ரிக் தொன் பால்மா மற்றும் 100 மெட்ரிக் தொன் மருந்து வகைகளை வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி நேற்று (26) இந்திய உயர்ஸ்தானிகரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

# வேப்பங்குளம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஏற்பட்ட அமைதியின்மையால் 7 பேர் கைது

*(வவுனியா நிருபர்)*

வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக 07 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் மாலைமுதல் நேற்று அதிகாலை வரை எரிபொருள் விநியோகம் இடம்பெற்றது.

வாகன இலக்கத்தகடுகளின் கடைசி இலக்கமான 0, 1, 2 ஆகிய இலக்க மோட்டார்சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள், சொகுசு கார்கள் என்பவற்றுக்கு எரிபொருள் விநியோகம் இடம்பெற்றது.

இந்நிலையில், எரிபொருள் பெறுவதற்கு செல்லுமிடத்தில் வாகனங்கள் கூடியமையால் வரிசையில் நின்றோருக்கும், ஏனையவர்களுக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டு அமைதியின்மை நிலவியது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த நெளுக்குளம் பொலிஸார் அமைதியின்மை தொடர்பில் சந்தேகத்தின்பேரில் 7 பேரை கைதுசெய்தனர். கைதுசெய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.


# பெற்றோல் கேட்ட குடும்பஸ்தர் மீது பொலிஸார் கண்மூடித்தனமாகத் தாக்குதல்

## மக்கொனவில் முச்சக்கரவண்டி சாரதிக்கு நேர்ந்த கதி

பெற்றோல் கேட்ட இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவர் பொலிஸாரால் கொடூரமாகத் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில், பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வவுலுகல மக்கொன பகுதியைச் சேர்ந்த சமந்த ராஜபக்ஷ என்ற 49 வயதுடைய நபரே இவ்வாறு தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரது கணுக்கால், கால், தோள்பட்டை என சுமார் 15 இடங்களில் காயங்கள், கீறல்கள் மற்றும் வீக்கங்கள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

"நான் ஒரு டாக்ஸி டிரைவர். மக்கொன சிபெட்கோ எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் 20ஆம் திகதிமுதல் பெற்றோலுக்காக காத்திருந்தேன். ஆனால், பெற்றோல் கிடைக்கவில்லை. கடந்த 24ஆம் திகதி இரவு, பொலிஸ் ஜீப் நிறுத்தப்பட்டு, கேன்கள் மற்றும் அதிக மோட்டார் சைக்கிள்களுக்கு பெற்றோல் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தது . நானும் 2 வீற்றர் பெற்றோல் கேட்டேன். அங்கிருந்த பொலிஸார் என்னை அடித்து ஜீப்பில் ஏற்றிக்கொண்டு பயாகல பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுசென்று கொடூரமாகத் தாக்கினார்கள்.



அன்றிரவு இரண்டு பொலிஸ் அதிகாரிகள் என்னை அறையிலிருந்து வெளியே அழைத்துச் சென்று, கைத்தடியை பற்களுக்கு இடையில் வைத்துவிட்டு கடுமையாக தாக்கினர்" - என சமந்த ராஜபக்ஷ வாக்குமூலம் அளித்துள்ளார்.

அவர் நேற்று முன்தினம் (25) மாலை களுத்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இது தொடர்பில் பாணந்துறை மனித உரிமைகள் அலுவலகத்திலும் சமந்த ராஜபக்ஷ முறைப்பாடு செய்துள்ளார். பாணந்துறை வைத்தியசாலை பொலிஸார் வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டனர்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜூலை 27ஆம் திகதி, புதன்கிழமை

# குரங்கு அம்மை தொடர்பில் முன்னெச்சரிக்கை தேவை

கொரோனா தொற்றுப் பரவல் உலகில் ஏற்படுத்திய தாக்கம் இன்னும் மறையாத நிலையில், குரங்கு அம்மை நோய் குறித்து உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

குரங்கு அம்மை குறித்து சுகாதார அவசர நிலையை பிரகடனப்படுத்தியுள்ள அந்த ஸ்தாபனம், உலகளாவிய ரீதியில் நோயின் ஆபத்து குறித்து அவதானமாக இருக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.

குரங்கு அம்மை எந்த நேரத்திலும் இலங்கையில் பரவக்கூடிய ஆபத்து உள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் ஒவ்வாமை பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார். அது ஒரு வைரஸ் நோய் என்பதால் பரவுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குரங்கு அம்மையானது ஆரம்பத்தில் சர்வதேச போக்குவரத்து தொடர்புகளின் ஊடாக பரவக்கூடியதாகவே அடையாளம் காணப்பட்டது. எனினும், சர்வதேச தொடர்புகள் அற்ற சந்தர்ப்பங்களிலும் பல நாடுகளில் இந்நோய்த் தொற்றுடையோர் இனங்காணப்பட்டுள்ளனர்.

எனவேதான், உலக சுகாதார ஸ்தாபனத்தினால் சுகாதார அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக வைத்திய நிபுணர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐரோப்பிய நாடுகளில் இந்த நோயால் ஆண்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் ஓரினச் சேர்க்கையாளர்கள் என்பது இனங்காணப்பட்டுள்ளது.

எனினும், இவ்வாறான பாலியல் தொடர்பின் ஊடாக இந்நோய் பரவுகிறது என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

ஏற்கனவே இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளோருடன் நெருங்கிப் பழகுதல், அவர்கள் உபயோகித்த பொருட்களை பயன்படுத்துதல் மற்றும் சுவாசத்தின் ஊடாக குரங்கு அம்மை பரவுகிறது. மனிதர்களிடமிருந்து மாத்திரமன்றி விலங்குகளிலிருந்தும் இந்நோய் பரவுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இரு பிரதான பிறழ்வுகள் மூலம் இந்நோய் பரவுகின்றது. அந்தப் பிறழ்வுகள் 10 வீதம் மரணத்தை ஏற்படுத்தக் கூடியன.

இந்த நோயை பி.சீ.ஆர். பரிசோதனைகள் ஊடாக இனங்காண முடியும். அதற்கான வசதிகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் உள்ளன.

கொவிட்-19 வைரஸ் தொற்றுடன் ஒப்பிடும்போது குரங்கு அம்மையானது சுமார் 50 ஆண்டுகள் பழைமையானது. அந்தத் தொற்றைவிட பரவும் வேகம் குறைவானது.

இதற்கான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சின்ன அம்மைக்குப் பயன்படுத்தப்படும் தடுப்பூசியானது குரங்கு அம்மைக்கு 85 வீதம் எதிர்ப்பு சக்தியாக பயன்படுத்தக் கூடியதாகும்.

இலங்கையில் இந்த நோய் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால், அது பரவும் வாய்ப்பு அதிகமாக காணப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் குரங்கு அம்மை நோய் பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உலகில் சுமார் 72 நாடுகளில் குரங்கு அம்மை நோய் பரவியுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. அண்டை நாடான இந்தியாவில் குரங்கு அம்மை நோயுடன் நான்கு பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், ஜப்பானில் ஒருவர் குரங்கு அம்மை நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளதாக அந்நாட்டு சுகாதார அதிகாரிகள் நேற்று முன்தினம் அறிவித்தனர்.

எதிர்பார்த்ததை விட அதிகமாக இந்த நோய் உலக நாடுகளிடையே பரவும் என அமெரிக்காவின் தொற்றுநோய் தடுப்புப் பணியகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரையில், குரங்கு அம்மை நோய் பரவலைத் தடுப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளது என்பது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

ஏற்கனவே, கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக நம் நாடு பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது. அந்தப் பாதிப்புகளிலிருந்து இப்போதைக்கு மீள முடியுமா என்பதும் தெரியவில்லை.

இந்நிலையில், அவ்வாறு இனியொரு தொற்று பரவுமாக இருந்தால் நிலைமை மேலும் மோசமடையும் என்பதை உறுதியாகக் கூறலாம். ஏனைய தொற்றுகளுக்குரிய அறிகுறிகள் தென்படுவதால் உடனடியாக குரங்கு தொற்றுதானா என்பதை கண்டறிய முடியாது. அதற்கான விசேட சுகாதார தொழில்நுட்பம் எமது நாட்டில் காணப்படுகிறதா என்பதையும் சிந்திக்க வேண்டியுள்ளது.

ஆதலால், இயலுமானவரை குரங்கு அம்மைத் தொற்று பரவுவதை தடுப்பதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக விமான நிலையங்களில் வெளிநாடுகளிலிருந்து வருவோர் குறித்தும், அவர்கள் தங்கியிருக்கும் இடங்கள் குறித்தும் தரவுகள் பெறப்பட்டு ஏதேனும் நோய் அறிகுறிகள் உள்ளனவா என்பது ஆராயப்படுதல் அவசியமாகும்.

இந்த விடயத்தில், வெள்ளம் வரும் முன் அணைகட்டுவதே சிறந்த செயற்பாடாகும். அதனைவிடுத்து காலம் கடந்து வருத்தப்படுவதில் எந்த அர்த்தமும் கிடையாது

# தாய்மொழியின் அருமை அறிவோம்




அண்மையில் தொலைக்காட்சியில் நம் மொழி குறித்த ஒரு கருத்து பரிமாற்ற நிகழ்ச்சியைக் காண நேர்ந்தது. அதில் ஆங்கில மோகம் கொண்ட பெற்றோரும், பெற்றோர் தமிழை தவிர்க்கச் சொன்னதால் தங்களுக்கு ஏற்பட்ட சங்கடங்களை விவரிக்கும் அவரது பிள்ளைகளும் இரு தரப்பாக உரையாடினார்கள்.

தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டு தமிழ் சரிவர தெரியாததால் தாங்கள் எதிர்கொண்ட இடர்களையும், அடைந்த அவமானங்களையும் அவர்கள் விலாவாரியாக விளக்கினார்கள். நன்கு ஆங்கிலம் பேசத் தெரிந்ததால் தங்களுக்கு ஏற்பட்ட பாராட்டை விட தமிழை சரியாக பேசவோ, வாசிக்கவோ தெரியாது போனதால் எதிர்கொண்ட அவமானங்களே அதிகம் என்றனர்.

பொது இடத்தில் ஒரு பேருந்தில் எழுதப்பட்டிருக்கும் தமிழ் வாசகத்தைக் கூட படிக்கத் தெரியாமல் பக்கத்தில் இருப்பவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டிய நிலைமையை அவர்கள் கூறினர்.

மொழி என்பது ஓர் இனத்தின் அடையாளமாக விளங்குவது. நம் பண்பாட்டின் குறியீடாகவும் அறியப்படுவது. நமது வாழ்வியலை அடையாளப்படுத்தும் கலங்கரை விளக்கம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுப் பெருமையுடைய ஒரு மொழி இவ்வுலகில் உண்டென்றால் அது தமிழைத் தவிர வேறொன்றும் இல்லை. இத்தனை பழைமையும், பெருமையும் உடையது நமது தமிழ் மொழி.

என் பிள்ளைகளுக்கு தமிழ் பேசத் தெரியாது என்று சொல்வதில் பெருமை கொண்ட பெற்றோர் சென்ற தலைமுறையோடு முடிந்து போய்விட்டனர் என்றே எண்ணத் தோன்றுகிறது. இடைப்பட்ட தலைமுறையினருக்கு இந்த எண்ணம் தடைபட்டுப்போனதால்தான் தமிழ் வளர்ச்சியில் மிகப்பெரிய தேக்கம் உருவாகிவிட்டதோ என்ற எண்ணம் தோன்றியது.

நம் இனம் அழிந்தால் நாமும் அடையாளமின்றி அழிந்து போவோம் என்பதை இளைய தலைமுறையினர் அறிந்து வைத்திருப்பது பெரிய ஆறுதலை அளித்தது.

அத்துடன் சமீப காலங்களில் தங்கள் குழந்தைகளுக்கு தமிழில் பெயர் வைப்பதை இன்றைய இளைய தலைமுறையினர் நடைமுறைப்படுத்துகிறார்கள். குழந்தைக்காக தமிழ்ப் பெயர்களை இணையத்தில் தேடுகிறார்கள். இளைஞர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அழகான தமிழ் பெயர்களை சூட்டுவதில் ஆர்வமுள்ளவர்களாக இருப்பது வரவேற்புக்குரியது.

அதுமட்டுமல்ல, பெயருக்கு முன்பான தம் தலைப்பெழுத்து தமிழிலேயே இருப்பதை அவர்கள் உறுதிப்படுத்துகிறார்கள். உதாரணத்திற்கு முன்பெல்லாம் ஆங்கிலத்தில் தலைப்பெழுத்தை அப்படியே பெயர்த்து எஸ். சாமிநாதன் என்று எழுதுவார்கள். தற்போது ச. சாமிநாதன் என்று பயன்படுத்துகிறார்கள். இது இளைஞர்கள் மத்தியில் சரியான புரிதலுடன் ஏற்பட்டுள்ள ஒரு நல்ல மாற்றமாக தெரிகிறது.

முன்பெல்லாம் பத்தாவது, பன்னிரண்டாவது வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்களில் ஆங்கிலத்தில் மட்டுமே மாணவர் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும். ஆனால், தற்போதைய நடைமுறையில் மாணவரின் பெயர் ஆங்கிலத்திலும், தமிழிலும் சரியான தலைப்பெழுத்துடன் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அத்துடன் அவர்தம் தாய் – தந்தை பெயரும் ஆங்கிலத்திலும், தமிழிலும் இடம்பெறுகிறது. மாணவர்கள் மனதில் தமிழுக்கான முக்கியத்துவம் சென்று சேர்வது மற்றொரு மகிழ்ச்சி.

அண்மையில் தமிழக பொலிஸ்துறையில் உதவி ஆய்வாளர் பணிக்கான எழுத்துத் தேர்வு மாநிலம் முழுவதும் நடைபெற்றது. இதில் முதல் தாளாக பொது அறிவுத் தேர்வும் இரண்டாம் தாளாக தமிழ்த் திறனறித் தேர்வும் நடத்தப்பட்டன. இதில் தமிழ்த் திறனறிதலில் 40% எடுத்து தேர்ச்சி அடைந்தால் மட்டுமே பொது அறிவுத் தேர்வுத்தாளை திருத்துவர்.

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்படும் தேர்வுகளிலும் சமீப காலங்களில் தமிழுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து கேள்விகள் கேட்கப்படுவதாக தெரிகிறது. இது நிச்சயம் வரவேற்கப்பட வேண்டியதே.

என் உறவினர் ஒருவர் தனது மகனின் திருமணப் பத்திரிகையை முழுக்க முழுக்க ஆங்கிலத்திலேயே அச்சிட்டு அனுப்பி இருந்தார். "தமிழில் விரிவாகவும், ஆங்கிலத்தில் சுருக்கமாகவும் அச்சிடும் நடைமுறை பல வருடங்களாக இருந்து வருகிறது. அப்படியிருக்க ஒட்டுமொத்தமாக ஏன் இப்படி தமிழைப் புறக்கணித்தீர்கள்?" என்று அவரிடம் கேட்டேன்.

அதற்கு அவர் "இப்போது அனைவருக்கும் ஆங்கிலம் தெரிகிறதே. நம் உறவுகள் அனைவரும் படித்தவர்கள்தானே. அதனால்தான் ஆங்கிலத்திலேயே அச்சேற்றி விட்டேன்" என்றார். நான் என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்தேன்.

நான் அவர் வீட்டுத் திருமணத்திற்குச் சென்றிருந்தபோது அவர், "உங்களைப் போலவே நிறைய உறவினர்கள் பத்திரிகையை ஏன் தமிழில் அச்சடிக்க வில்லை என்று என்னிடம் கடிந்து கொண்டார்கள்" என்றார்.

பொது இடங்களில் தமிழில் பேசுவதை நாகரிகக் குறைவாக சிலர் எண்ணுவது மற்றொரு வேடிக்கை. நம் தாய்மொழியான தமிழில் பேச நாம் ஏன் வெட்கப்பட வேண்டும்?

இரண்டு சீனர்கள் சந்தித்துக் கொண்டால் அவர்கள் தங்கள் தாய்மொழியான சீனமொழியில்தான் பேசுகிறார்கள். இரண்டு ஜப்பானியர்கள் சந்தித்துக் கொண்டால் அவர்கள் ஜப்பானிய மொழியில்தான் பேசுகிறார்கள். இரண்டு ஜேர்மானியர்கள் சந்தித்துக் கொண்டால் ஜேர்மன் மொழியில்தான் பேசுகிறார்கள். ஆனால், தமிழர்கள் மட்டும், இருவருக்கும் தமிழ் தெரிந்தும் ஆங்கிலத்தில் பேச முற்படுகிறார்கள்.

உலக அளவில் முன்னேறிய நாடுகளான சீனா, ஜப்பான், பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகள் ஆங்கிலத்தை விருப்பப் பாடமாகத்தான் வைத்திருக்கின்றன. அங்கெல்லாம் தாய்மொழியில்தான் கல்வி கற்பிக்கப்படுகிறது.

நம் தமிழ்நாட்டில் ஐ.ஜி.எஸ்.சி. பாடத்திட்டத்தின்படி பயிலும் மாணவர்கள் கட்டாய மொழியாக ஆங்கிலத்தையும், விருப்ப மொழியாக தேவைப்பட்டால் தமிழைத் தேர்வு செய்து கொள்ளலாம். இல்லையெனில் அவர்களுக்கு பிடித்த வேறு ஒரு இந்திய மொழியை படிக்கலாம் என்று விதி இருக்கிறது.

தமிழ்நாட்டில் மாணவர்கள் ஒரு பாடமாவது தமிழ் படித்தே ஆகவேண்டும் என்று கட்டாயப்படுத்தவில்லை எனில் அடுத்த தலைமுறைக்கு தமிழ் தெரியாமலேயே போய்விடும் அபாயம் உள்ளது. ஒருபுறம் தமிழை ஆட்சிமொழியாக தீவிரமாக முயன்று வரும் நிலையில், மற்றொரு புறம் தாய்மொழி தமிழாக இருந்தும் தமிழ் தெரியாத இளைஞர்களாக வலம் வருவது வருத்தத்திற்குரியது.

பன்னாட்டுத் தொடர்புக்கு நாம் ஆங்கிலத்தைப் பயன்படுத்தலாம். ஆனால், வீடுகளில் தமிழ் ஒலிக்கட்டுமே! ஒரு புது மொழியை மூன்று மாதங்களில் கற்றுக் கொள்ளலாம் என்று மொழியியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். அப்படிப் பார்த்தால், நாம் எத்தனையோ மொழிகளை கற்றுக்கொள்ளலாம். ஆனால், தாய்மொழியைத் தவிர்ப்பது நமக்கே கேடாக முடியும்.

தமிழின் மீது பெரும் தாகம் கொண்ட நண்பர் ஒருவர் தமிழ் வளர்ச்சி பெற நாம் செய்ய வேண்டிய பலவற்றை அடுக்கினார். நம் அன்றாட பயன்பாடுகளில் சில பழக்கவழக்கங்களை சிறிய அளவில் மாற்றி அமைக்கும்போது பெருவாரியாக தமிழை நாம் பயன்படுத்துவதாக அமையும் என்பது ஏற்றுக் கொள்வதாக இருந்தது.

அவர், "வீட்டில் மம்மி, டாடியை தவிர்த்து அம்மா, அப்பா என்று நம் பிள்ளைகள் உயிரோட்டமாக அழைப்பதை நடைமுறைக்கு கொண்டு வந்தால் பெருஞ்சிறப்பாக இருக்கும் எனவும், தொலைபேசியில் முதலில் 'ஹலோ' என்று ஆங்கில வார்த்தையைப் பயன்படுத்துவதற்கு மாற்றாக 'வணக்கம்' என்று தொடங்கினால் எண்ணற்ற முறை நாம் தமிழை பயன்பாட்டுக்கு கொண்டு வருவோம்" என்றும் சொல்லி யோசிக்க வைத்தார்.

"நிறுவனத்தின் பெயர்ப் பலகையை தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்து அடுத்த மொழிக்கு இரண்டாவதாக வாய்ப்பு கொடுக்கும் பட்சத்தில் வீதியெங்கும் தமிழ் நிலைத்து வாழும். இது தமிழ்நாட்டு சட்டமும் கூட" என்று தொடர்ந்த அவர், "நம்முடைய அலைபேசியில் தமிழ் எழுத்தை தட்டச்சு செய்யும்படியான செயலியை பதிவிறக்கம் செய்துகொண்டால் தமிழிலேயே உரையாடிக் கொள்ளலாம்" என்று உற்சாகம் ஏற்றினார்.

"தற்போது குரல் பதிவாக தமிழ்ச் சொற்களை அனுப்பும் வசதியும் வந்துவிட்டது. அடுத்து, ஆங்கிலத்தில் கையொப்பமிடுவது பழகிவிட்டது என்று சொல்லாமல் செல்லும் இடம் எங்கிலும் தமிழில் கையொப்பமிடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது பெரும் ஏற்றத்தைத் தரும்" என்று குறிப்பிட்ட அவர், "தமிழில் கையொப்பமிடுவது சட்டபூர்வமாக செல்லும்" என்றார். "நம் பிள்ளைகளையும் அவ்வாறு பழக்கப்படுத்துவது நம் முக்கிய கடமைகளுள் ஒன்று" என்று உறுதி காட்டினார்.

அத்துடன் நம் வீடுகளில், மகிழுந்துகளில் பெயர் பொறிக்க, எழுத முனையும் போது தமிழிலேயே எழுதுவது நிலைத்த தன்மையைப் பெற்றுத் தருவதாக சொன்ன அவர், நாம் அன்றாடம் பயன்படுத்தும் பல்வேறு படிவங்களில் தமிழிலேயே எழுத வலியுறுத்தினார். "தமிழ் வளர்ச்சிக்கு பிறர் செய்யும் மிகச்சிறிய செயலுக்குக் கூட அவர்களை பாராட்டி ஊக்குவிக்க வேண்டும்" என்று கூறிய அவர் பேச்சு முழுதும் தமிழ், தமிழ் என முழங்கிக் கொண்டிருந்தது.

தனிப்பட்ட ஒருவரின் மனநிலையால் மாற்றம் வந்துவிடாது என்பது அனைவரும் அறிந்ததுதான். ஆனால், ஒருவரை பார்த்து மற்றொருவர் பின்பற்றும் நடைமுறை பெருகும். உலகில் 6,000 மொழிகள் தோன்றியதாக வரலாறு சொல்கிறது. அதில் தற்போது உயிரோடு இருப்பவை 2,500 மொழிகள் எனவும், அதில் முதல் பத்து இடங்களுக்குள் ஒன்றாக நம் தமிழ் மொழி உள்ளது என்றும் அறியப்படுகிறது.

தனித்துவமான சொல் வளத்தையும், கோட்பாட்டின்படி அமைந்த இலக்கணத்தையும் பெற்று, இன்று வரை இளமை மாறாது வளர்ந்து வரும் தமிழ் மொழி தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்கிறது. அந்த உயர்தனிச் செம்மொழியை தாய்மொழியாக பெற்ற நாம் அதன் சிறப்பு உணர்ந்து போற்றுவோம்.

**- பவித்ரா நந்தகுமார் -**

## இன்றைய நாளில்...

- 1862 – சான் பிரான்சிஸ்கோவில் இருந்து பனாமா நோக்கிச் சென்று கொண்டிருந்த 'கோல்டன் கேட்' என்ற கப்பல் மெக்சிக்கோவில் தீப்பிடித்து மூழ்கியதில் 231 பேர் உயிரிழந்தனர்.
- 1921 – இன்சுலின் இரத்தச் சர்க்கரையைக் கட்டுப்படுத்தும் முறையை டொராண்டோ பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர்.
- 1955 – மலேஷியாவின் முதலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராக வீ.தி.சம்பந்தன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1975 – விடுதலைப்புலிகளின் முதலாவது ஆயுதத் தாக்குதல் நடத்தப்பட்டது. யாழ்ப்பாண மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1983 – கறுப்பு ஜூலை: கொழும்பு, வெலிக்கடை சிறையில் இடம்பெற்ற இரண்டாம் கட்ட படுகொலை நிகழ்வில் 18 தமிழ்க் கைதிகள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர்.

## நக்கல் நமசிவாயம்



# நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா

## நடைமுறை மற்றும் கட்டுப்பாடுகள் யாழ். மாநகர சபையினால் வெளியீடு



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில், திருவிழாவுக்கான ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக யாழ். மாநகர சபையினால் விளக்கமளிக்கப்பட்டது.

மஹோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று (26) காலை 9 மணியளவில் யாழ். மாநகர சபையில் இடம்பெற்றது.

ஈஸ்டர் குண்டு வெடிப்பு மற்றும் கொரோனா தொற்று காரணமாக கடந்த மூன்று வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்ற நல்லூர் மஹோற்சவம் வழமைபோன்று அதாவது, 2018ஆம் ஆண்டுக்கு முன்பு எவ்வாறு உற்சவம் நடந்ததோ அதேபோல இம்முறையும் இடம்பெறுமென யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் தெரிவித்தார்.

கலந்துரையாடலுக்குப் பின்னர் நல்லூர் ஆலயப் பெருந்திருவிழா ஏற்பாடுகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஓகஸ்ட் முதலாம் திகதி காலையிலிருந்து நல்லூர் ஆலய சுற்றுவீதிகளில் போக்குவரத்து தடைசெய்யப்பட்டு ஓகஸ்ட் 29ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னரே திறந்து விடப்படும்.

ஆலய வெளி வீதியைச் சூழ ஆலய நிர்வாகத்தினரால் சிவப்பு, வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் மாநகர சபையின் நீர் விநியோக வாகனம் மற்றும் கழிவகற்றும் வாகனங்களைத் தவிர எக்காரணம் கொண்டும் வாகனங்கள் உட்செல்ல முடியாது. அதேபோல் வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் எந்தவிதமான வியாபார நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது. ட்ரோன் கெமராக்களை பயன்படுத்தி காணொளி பதிவுசெய்ய முடியாது.

காலணிகளுடன் ஆலய வளாகத்திற்குள் பிரவேசிக்க முடியாது. ஆலயத்துக்கு நேர்த்திக்கடன்களைக் நிறைவேற்றுவதற்காக வருகின்ற தூக்குக்காவடிகள் அனைத்தும் ஆலயத்தின் முன்பக்க பருத்தித்துறை வீதி வழியாக மட்டுமே உள்நுழைய முடியும். அவ்வாறு வருகின்ற காவடிகள் இறக்கப்பட்டதும், வாகனங்கள் அனைத்தும், செட்டித்தெரு வீதி வழியாக வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ். மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியால் பயணித்து யாழ். நகரை அடைய முடியும். ஆனால், இரதோற்சவம் மற்றும் சப்பர திருவிழாக்களின்போது கச்சேரி நல்லூர் வீதியாலேயே பயணிக்க முடியும்.

முகக்கவசங்களை அணிவது சட்டமாக்கப் படவில்லை. இருந்தபோதும் கொரோனா எச்சரிக்கை காணப்படுவதால் முகக்கவசங்களை அணிந்து தன்னெழுச்சியாக சுகாதார விதிமுறைகளை பக்தர்கள் பின்பற்றவேண்டும். ஒவ்வொரு தனிமனிதனும் தங்களது சுகாதாரத்தில் கவனமெடுத்து செயல்பட வேண்டும்.

திருட்டுச் சம்பவங்களைத் தவிர்க்க நல்லூர் ஆலயச் சூழலில் யாழ். மாநகர சபையினால் கண்காணிப்பு கெமராக்கள் பொருத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாநகர முதல்வர், மாநகர ஆணையாளர், மாநகர அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உட்பட சம்பந்தப்பட்ட துறைசார் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## 26.07.2022 நாணய மாற்று வீதம்

ஸ்ரீ லංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 136 3514 | 147 6401 |
| கனேடியன் டொலர் | 165 8835 | 178 0781 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 733 | 44 0374 |
| யூரோ | 252 8748 | 267 6366 |
| ஜப்பான் யென் | 1 5 22 | 1 6016 |
| சிங்கப்பூர் டொலர் | 145 4043 | 156 66 |
| ஸ்ரேலிங் பவுன் | 318 4603 | 335 4866 |
| சுவிஸ் பிராங்க் | 258 061 | 274 1313 |
| ஐ.அ.டொலர் | 246 4078 | 257 4033 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 846 4105 |
| குவைட் | குவைட் தினார் | 0,064 3252 |
| ஓமான் | ஓமான் றியால் | 826 54 1 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 1764 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 583 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 1710 |

# இந்திய உயர்ஸ்தானிகர் பாக்லே பிரதமர் குணவர்தனவுடன் சந்திப்பு



இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோருக்கிடையிலான மரியாதையின் நிமித்தமான கலந்துரையாடல் கொழும்பில் நேற்று இடம்பெற்றது. புதிதாக தெரிவுசெய்யப்பட்டுள்ள பிரதமருக்கு இந்திய மத்திய அரசாங்கத்தினதும் மக்களதும் வாழ்த்துகளை உயர்ஸ்தானிகர் இதன்போது தெரிவித்தார்.

மேலும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கையுடனான நீண்டகால நெருக்கமான உறவை வலுப்படுத்துவதில் பிரதமரின் பங்களிப்பு குறித்தும் கோபால் பாக்லே கருத்துப் பரிமாற்றங்களில் ஈடுபட்டார்,

அத்துடன், இந்தியாவின் உதவிகளுக்கு பாராட்டுகளைத் தெரிவித்தமை தொடர்பில் பிரதமருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார்.

# சாவகச்சேரி பிரதேசத்தில் QR முறைமையில் எரிபொருள் விநியோகம்




(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 26/07 செவ்வாய்க்கிழமை கியூ.ஆர். (QR) முறைமையின் கீழ் பெற்றோல் வழங்கப்பட்டது.

0, 1, 2 ஆகிய இறுதி இலக்கங்களைக் கொண்ட வாகனங்களுக்கே இவ்வாறு குறித்த QR முறைமையின் கீழ் எரிபொருள் வழங்கப்பட்டது.

அத்துடன், குறித்த விநியோகத்தின்போது பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட எரிபொருள் அட்டை பரிசோதிக்கப்பட்டு கடந்த 19ஆம் திகதிக்கு முன்னர் இறுதியாக எரிபொருள் பெற்றவர்களுக்கே எரிபொருள் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# துப்பாக்கிச் சூட்டில் நபரொருவர் உயிரிழப்பு

பலப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று (26) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் காரணமாக பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நபர் உயிரிழந்துள்ளார்.

அம்பலாங்கொட, பலப்பிட்டிய பிரதேசத்தில் இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் படுகாயங்களுக்குள்ளான நிலையல் பலப்பிட்டிய ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அம்பலாங்கொட, பொனதுவ பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையொருவரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் கொலைச் சம்பவமொன்று தொடர்பான வழக்குடன் தொடர்புடைய சந்தேகநபர் என்பதுடன், பலப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்துக்கு சென்று, மீண்டும் வீடு திரும்பயபோதே இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் குழுக்களுக்கிடையே மோதல்

**பாணந்துறையில் ஊடகவியலாளரை தாக்கிய முகாமையாளர் கைது**

பாணந்துறை, வலான நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலின்போது செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளரைத் தாக்கிய முகாமையாளரும் மற்றுமொரு நபரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எரிபொருள் நிரப்பு நிலையத்தின் காணொளியை பேஸ்புக்கில் பதிவிட்டதாகக் கூறி ஊடகவியலாளர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாணந்துறையைச் சேர்ந்த 56 மற்றும் 32 ஆகிய வயதுடைய இருவரே பொலிஸரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வாகனங்களின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில் எரிபொருள் வழங்க வேண்டுமென அமைச்சால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டபோதிலும் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெருந்திரளானோர் கூடியிருந்துள்ளனர். இதன்போது மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பிலான காணொளியை பதிவு செய்த ஊடகவியலாளர் தனது பேஸ்புக்கில் தரவேற்றியுள்ளார். இதனை அடிப்படையாகக் கொண்டே ஊடகவியலாளர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பாணந்துறை தெற்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ‘மனிதநேய ஒன்றிணைவு’ ரூ.200 மில்லியன் பெறுமதியான அவசரகால நிவாரணங்ளை 80,000இற்கும் அதிகளவான குடும்பங்களுக்கு வழங்கியுள்ளது

**அனைத்து இலங்கையர்களையும் பெரு நிறுவனங்களையும் நாடளாவிய ரீதியில் இடம்பெரும் அவசரகால நிவாரணப் பணியுடன் இணையுமாறு அழைக்கின்றது.**

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்திசெய்ய முடியாத சமூகங்களைச் சேர்ந்த 2,00,000 குடும்பங்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் மனிதாபிமான செயற்றிட்டமான ‘மனிதநேய ஒன்றிணைவு’ 2022 ஜூலை 11 வரையில் நாடளாவிய ரீதியில் செயல்பட்டு 80,000இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு 200 மில்லியன் ரூபா பெறுமதியான அவசரகால நிவாரணங்களை வழங்கி தனது அடுத்த மைல்கல்லை எட்டியுள்ளது.



டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MAS Holdings, Hemas Holdings PLC, CBL Group, Citi, Sunshine Holdings PLC மற்றும் Huawei Technologies Lanka Co. Pvt Ltd., இந்தத் திட்டத்தின் விநியோக பங்காளரான சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் சுயாதீன கணக்காய்வு பங்காளியான PwC ஸ்ரீலங்கா ஆகியவற்றால் அறிமுகப்படுத்தப்பட்டு நாடளாவிய ரீதியில் அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்திசெய்ய முடியாமல் வறுமையில் வாடும் மக்களுக்கு அவசர நிவாரணம் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். சுயாதீன தொலைக்காட்சி சேவை, சியத, ஸ்வர்ணவாஹினி, ரிவி தெரண மற்றும் வசந்தம் ஆகிய அலைவரிசைகள் ஊடக பங்காளராக இந்த செயற்றிட்டத்திற்கு பங்களிப்பு செய்கின்றன.

நாட்டின் தற்போதைய பொருளாதார சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ள நமது சொந்த மக்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்குவதற்கான கூட்டு முயற்சியில் இணையுமாறு ஏனைய அனைத்து பெருநிறுவனங்களுக்கு மனிதநேய ஒன்றிணைவு அழைப்பு விடுக்கின்றது. அனைவரும் தங்களின் கிரெடிட்/டெபிட் கார்ட், வங்கி வைப்பு eZ Cash, Star Points, genie அல்லது 0776 421421 என்ற இலக்கத்திற்கு Top up செய்வதன் மூலம் இணைந்துகொள்ள முடியும். நன்கொடை வழங்குதல் தொடர்பாக செயல்முறை பற்றிய மேலதிக தகவல்களுக்கு https://dlg.lk/don_E இற்கு செல்லுங்கள்.

தற்போது, நாடளாவிய ரீதியில் 25 மாவட்டங்களிலும் அவசரகால நிவாரணங்கள் விநியோகிக்கப்படுகின்றன, மேலும் ‘மனிதநேய ஒன்றிணைவு’ திட்டமானது, பயனுள்ள பொருளாதார மீட்புத் திட்டத்தின் மூலம் நாட்டில் நிலையான நன்மைகள் நிறுவப்படும் வரை அதன் நிவாரண நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்கும். மனிதநேய ஒன்றிணைவு பற்றிய மேலதிக தகவல்களுக்கு https://www.dialog.lk/corporateஇற்கு செல்லுங்கள்.

மனிதநேய ஒன்றிணைவு

Dialog | MAS | HEMAS | CBL | citi | sunshine | HUAWEI

# பெண்களை கொலைசெய்து கொள்ளையிடும் கும்பல்

**அண்மைக்காலமாக சம்பவங்கள் அதிகரிப்பு**

வீடுகளில் தனிமையில் இருக்கும் பெண்களைக் கொலைசெய்து பணம், பொருட்களை கொள்ளையிடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நாட்டில் கடந்த வாரங்களில் தனிமையில் இருந்த ஆறு பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் சுட்டிக்காட்டினர்.

கண்டி, களனி, மாத்தளை, குருநாகல் ஆகிய பகுதிகளிலேயே இவ்வாறான கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த ஆறு கொலைச் சம்பவங்களில் மூன்றுடன் தொடர்புடையோர் அடையாளங்காணப்பட்டு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கொள்ளையிட்டதாகக் கூறப்படும் பணம், நகை ஆகியனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

நாட்டில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில், தனிமையில் இருக்கும் பெண்களை அடையாளங் கண்டுகொள்ளும் திருடர்கள் அவர்களைக் கொலைசெய்து தங்க நகைகள், பணம் மற்றும் பெறுமதியான பொருட்களை கொள்ளையிட்டுச் செல்கின்றனர். இது குறித்து அவதானமாக இருக்குமாறு பொலிஸார் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.

# ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். பல்கலையில் போராட்டம்




(யாழ். செய்தியாளர்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை கவனயீர்ப்புப் போராட்டமொன்று இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஒன்றுகூடிய பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களுடைய போராட்டத்திற்கு மதிப்பளி, நாட்டை கொள்ளை அடிக்காதே, ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே, காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி வழங்கு போன்ற கோஷங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தி போராட்டத்தை முன்னெடுத்தனர்'.

# ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய இராஜகோபுர மலர் வெளியீட்டு விழா











(யாழ். நிருபர்)

தென்மராட்சி கல்வயல் புலுட்டையன் பிள்ளையார் என அழைக்கப்படும் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் ஏழு தளங்கள் கொண்டதாக 81 அடி உயர இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டமையை முன்னிட்டு ஆக்கப்பட்ட சிறப்பு மலரின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் திங்கள் ஆலய தேர்த்திருவிழாவின்போது இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் ச. அகிலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், ராஜகோபுரத் திருப்பணியை உபயமாக மேற்கொண்ட பிரித்தானிய வைத்தியர் டாக்டர் ச. ஜெயநாதன் மலரை வெளியிட்டு வைத்தார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் மலருக்கான நயப்புரையை ஆற்றினார்.

ஆலய தர்மகர்த்தா சி. விவேகானந்தன், மலர் ஆசிரியர் திருக்கணிதம் சிவஞானம், கோபுர நிர்மாணக் கலைஞர் மணிகண்டன் குழுவினர் ஆகியோருக்கான கௌரவிப்புகளும் இடம்பெற்றன.

# யாழ். பல்கலையின் இந்து கற்கைகள் பீடத்தின் முதலாவது அணி மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தின் முதலாவது அணி மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வின் அறிமுக வைபவம் இன்று (27ஆம் திகதி) காலை 8 மணிமுதல் இடம்பெறவுள்ளது.

க.பொ.த. உயர்தர 2019ஆம் ஆண்டு கலைப் பிரிவில் தோற்றி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் கலைப் பீடத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களில் சுமார் 50 மாணவர்கள் இந்து கற்கைகள் பீடத்தில் 2020 / 2021ஆம் கல்வியாண்டுக்காக பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். இவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வே இன்று புதன்கிழமை காலை அறிமுக வைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை நிறுவிய காலத்திலிருந்தே இந்து கற்கைகளுக்கென தனியான பீடமொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தபோதிலும் 2019ஆம் ஆண்டே அதற்கான அங்கீகாரம் கிடைத்தது.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1)ஆம்




பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதந்துரைக்கமைவாக அப்போதைய நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஒப்பமிட்டு 2019ஆம் ஆண்டு மார்ச் 18ஆம் திகதி வெளியிடப்பட்ட 2115/5ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் யாழ். பல்கலைக்கழகத்தின் 11ஆவது பீடமாக இந்து கற்கைகள் பீடம் ஸ்தாபிக்கப்பட்டது.

2019ஆம் ஆண்டு ஜூன் மாதம் 06ஆம் திகதிமுதல் யாழ். பல்கலைக்கழகத்தில் இந்து கற்கைகள் பீடம் செயற்படத் தொடங்கியது. அதன் முதலாவது பீடாதிபதியாக கலாநிதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன் நியமிக்கப்பட்டிருந்தார். ஆரம்பத்தில் கலைப்பீடத்துடன் இணைக்கப்பட்டிருந்த இந்து நாகரீகம், சைவ சித்தாந்தம், சமஸ்கிருதம் ஆகிய துறைகள் இந்து கற்கைகள் பீடத்தினுள் உள்வாங்கப்பட்டன. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்களில் ஒன்றாக இந்து கற்கைகளுக்கென தனியான பீடம் ஒன்று நிறுவப்பட்டு, மாணவர்கள் கற்றுத் தேற வேண்டுமென்பது வள்ளலார் சேர். பொன். இராமநாதனின் கனவுகளில் ஒன்றாக இருந்ததெனவும், தற்போது முதலாவது மாணவர் உள்வாங்கலின் மூலம் அவரது கனவு மெய்ப்படுகிறதெனவும் மூத்த கல்வியியலாளர்களும், அறிஞர்களும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு சமூக சேவகரால் மருந்துகள் நன்கொடை



நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியின்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர கோரிக்கையை கருத்திற்கொண்டு யாழ். காரைநகரை சேர்ந்தவரும் தற்போது சுவிஸ் நாட்டில் வசித்துவரும் சமூக சேவையாளருமான சுப்பிரமணியம் கதிர்காமநாதன் 24 மில்லியன் பெறுமதியான மருந்துப் பொருட்களை வழங்கியுள்ளார்.

இந்த மருந்துப் பொருட்களை கடந்த 21ஆம் திகதி சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.ஜானக ஸ்ரீசந்திரகுப்தா மற்றும் வைத்தியர் அன்வர் ஹம்தானி ஆகியோரிடம் உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளார். மேலும், இந்த இக்கட்டான தருணத்தில் இலங்கையில் தடையின்றி சுகாதார சேவைகளைப் பேணுவதில் சமூக சேவையாளர் வழங்கும் பங்களிப்பு முக்கியமானது. அத்துடன், அவரது ஆதரவை உண்மையிலேயே பாராட்டுவதாகவும் வைத்திய பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# மாற்றுப்பாலினத்தினருக்கு எதிரான வன்முறைகளை கண்டித்து பேரணி










(யாழ். நிருபர்)

மாற்றுப்பாலின சமூகத்தினருக்கு எதிரான ஒடுக்குமுறைகளைக் கண்டித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பேரணி ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்த பேரணி பல்கலைக்கழக பிரதான நுழைவாயினூடாக சென்று விஞ்ஞான பீட நுழைவாயினூடாக பல்கலைக்கழகத்திற்குள் சென்று நிறைவடைந்தது.

பேரணியில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

பேரணியின் நிறைவில் மாற்றுப்பாலின சமூகத்தினர் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஆற்றுகையொன்றும் இடம்பெற்றது.

# யாழ். மாநகர கழிவகற்றும்போது பாதுகாப்பு அங்கி அணியாவிடின் கொடுப்பனவு இல்லை

## சபை அமர்வின்போது தீர்மானம்

(யாழ். நிருபர்)

யாழ். மாநகர சபை திண்மக்கழிவகற்றல் உத்தியோகத்தர்களும் தூய்மைப் பணியாளர்களும் உரிய பாதுகாப்பு அங்கிகளை அணிய வேண்டும். அதை அணியத் தவறும் பட்சத்தில் அவர்களுக்கான கொடுப்பனவை வழங்காதிருக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற யாழ். மாநகர சபை அமர்வின்போதே இந்த விடயம் சபை உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

யு.எஸ்.எய்ட். அமைப்பின் நிதியுதவியில் யாழ். மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் உத்தியோகத்தர்களுக்கும் தூய்மைப் பணியாளர்களுக்கும் பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்பட்டுள்ளன.



ஆனாலும், பெரும்பாலான திண்மக்கழிவகற்றல் உத்தியோகத்தர்களும் தூய்மைப் பணியாளர்களும் உரிய பாதுகாப்பு அங்கிகளை அணியாது பணிகளில் ஈடுபடுவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# பிரதேச செயலக அதிகரிப்பு விவகாரத்தில் பிரதமர் நியாயம் பெற்றுத்தர வேண்டும்

## நுவரெலியா மாவட்ட முன்னாள் எம்.பி. திலகரால் மகஜர் கையளிப்பு




நுவரெலியா மாவட்ட பிரதேச செயலக அதிகரிப்பு விவகாரத்தில் காட்டுப்பட்டுள்ள பாரபட்சத்தை கவனத்தில் எடுத்து நுவரெலியா மாவட்ட மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க பிரதமர் தினேஷ் குணவர்தன முன்வரவேண்டும் என மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜ் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

புதிய பிரதமராகவும் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராகவும் பதவியேற்றுள்ள தினேஷ் குணவர்தன, பொது நிர்வாக அமைச்சில் கடமைகளைப் பொறுப்பேற்கும் நிகழ்வின்போது புதிய பிரதமரைச் சந்தித்து தனது வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன் நுவரெலியா மாவட்ட பிரதேச செயலக விடயத்தில் காட்டப்பட்டுள்ள பாரபட்சம் குறித்த கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றையும் தாம் கையளித்ததாக ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதேச செயலக அதிகரிப்பு விவகாரத்தில் நுவரெலியா மாவட்ட மக்களுக்குக் காட்டப்பட்டுள்ள பாரபட்சம் தொடர்பில் கடந்த 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் மலையக அரசியல் அரங்கம் கையெழுத்து இயக்கத்தையும் கவனயீர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்தது. இது குறித்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப்பாட்டினைப் பதிவு செய்துள்ளது. அதேநேரம் துறைசார்ந்த அமைச்சருக்கும் எழுத்து மூலமாக அறிவித்திருந்தது.

கடந்த சில மாதங்களாக நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக மேற்படி விடயங்களின் முன்னெடுப்பு ஒத்திவைக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் புதிய ஜனாதிபதி, புதிய பிரதமர், அமைச்சரவை என மாற்றங்களுடன் மீண்டும் நாட்டின் நிர்வாகப் பணிகள் தொடங்கப் பட்டுள்ள நிலையில் மேற்படி விடயம் தொடர்பாக நுவரெலியா மாவட்ட மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்தன நடவடிக்கை எடுக்க வேண்டும் என மலையக அரசியல் அரங்கத்தின் சார்பாக கோரிக்கை மனுவை கையளித்தோம்.

இதற்கு முன்னரும் இந்த விடயம் தொடர்பில் அவரை சந்தித்துப் பேசியிருந்தபோதிலும் தற்போது அவர் பிரதமராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், மேலதிக அதிகாரங்களுடன் இந்த விடயத்தில் கவனம் செலுத்த முடியும் என்ற அடிப்படையில் எழுத்து மூலமாகவும் எமது கோரிக்கையை முன்வைத்தோம் எனவும் தெரிவித்தார்.

# மழையினால் பசறை வீதியில் போக்குவரத்துக்கு பாதிப்பு



கடும் மழை காரணமாக பதுளை, பசறை வீதி 5ஆம் கட்டை பகுதியில் நேற்றுமுன்தினம் (25) போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டிருந்தது.

கிராம முகாமையாளரின் செயற்பாட்டின் கீழ் தற்போது வீதி ஒழுங்கமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் மட்டக்களப்பு, மொனராகலை, பிபிலை ஆகிய மாவட்டங்களுக்கான போக்குவரத்து தடைகள் நீக்கப்பட்டுள்ளன.

எனினும், இவ்வீதியில் இன்றும் பல இடங்களில் போக்குவரத்து தடை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக தெரிவிக்கப்படும் அதேவேளை, பாதையில் பயணிப்போர் பாதுகாப்பாக செல்லுமாறும் கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

# இருநாட்களாக எரிவாயுவுக்காக காத்திருக்கும் மஸ்கெலியா மக்கள்



(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா நகரில் உள்ள எரிவாயு விற்பனை நிலையங்களில் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட பாவனையாளர்கள் நேற்றுமுன்தினம் மாலை 6மணிமுதல் எரிவாயுவை பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

இவர்கள் அனைவரும் நேற்றுமுன்தினம் மாலை ஆறு மணி முதல் இரவு முழுவதும் கொட்டும் மழையிலும் நனைந்துகொண்டு தமக்கான எரிவாயுவைப் பெற்றுக்கொள்ள காத்திருந்தனர்.

நேற்று காலை எரிவாயு வரும் என எதிர்பார்த்தபோதிலும், காலை 10 மணி வரையில் வந்திருக்கவில்லை. இதனால் காத்திருந்தவர்கள் சலிப்படைந்தபோதிலும் தற்போது நாட்டில் எரிவாயு பிரச்சினை ஓரளவு சுமுகமானதாகவும் கடந்த காலங்களைபோல எமக்கான எரிவாயுவை தடையின்றி வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

மேலும், மஸ்கெலியா நகரில் எரிவாயு விற்பனை நிலையங்கள் நான்கு உள்ளன. அங்கு எரிவாயு விற்பனை செய்யப்படுகின்றபோதிலும் பாவனையாளர்களுக்கு முறையாக எரிவாயு வழங்கப்படுவதில்லை. ஹோட்டல்கள் போன்ற கடைகளில் அதிகளவில் எரிவாயுவை கொள்வனவு செய்வதால் வீட்டுப் பாவனையாளர்களுக்கு கிடைக்காத சந்தர்ப்பங்கள் அதிகமாகவே நிலவுகின்றன.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி இப்பகுதியில் எரிவாயு வழங்கும்போது ஹோட்டல்களுக்கு தனியாக வழங்கவும் பொதுமக்களுக்கான வீட்டுப்பாவனைக்கு தனியாக வழங்கவும் ஏற்பாடுகளை செய்து தரவேண்டும் எனவும் இதன்போது பாவனையாளர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.





பதுளை – ஊவா மாகாண சபைக்கு முன்பாக தனியார்த்துறை பஸ்களுக்கு டீசல் எரிபொருளைப் பெற்றுத் தரக்கோரி, நேற்று(26) பிரதான பாதையை மறித்து ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. சுமார் ஒரு மணித்தியாலம் வரை நீடித்த இப்போராட்டமானது, பொலிஸாரின் தலையீட்டினால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (பதுளை நிருபர்)

# கண்டியில் உப உணவுப் பயிர்ச்செய்கை திட்டங்கள்

(கண்டி நிருபர்)

நாட்டில் எதிர்காலத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் அதனை எதிர்கொள்ளும் வகையில் கண்டி மாவட்டத்தில் பல்வேறு செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், கண்டி மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலாளர் காரியாலயங்களிலும் உப உணவுப் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ள செயலாளர் சந்தன தென்னகோனினால் ஊக்கமளிக்கப்பட்டு வருகின்ற அதேநேரம் காரியாலய நேரங்களில் அன்றாடப் பணிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேற்படி பணிகளில் ஈடுபடுமாறும் ஹரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் காரியாலய வளவில் மேற்கொள்ளப்படும்



உப உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தை பார்வையிடும்போது மாவட்ட செயலாளரால் மேற்படி பணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய அரசு தொடர்பில் அரசாங்கத்திடமிருந்து அதிகாரபூர்வ அழைப்பு இதுவரை வரவில்லை

## த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் தகவல்



தேசிய அரசு அல்லது சர்வகட்சி அரசு அமைப்பது தொடர்பில் அரசாங்கத்திடமிருந்து எமக்கு இதுவரை அதிகாரபூர்வ அழைப்பு எதுவும் வரவில்லை. ஏனைய எதிர்க்கட்சிகளுக்கும் அதிகாரபூர்வ அழைப்புகள் வரவில்லை. ஆகவே, அதற்குள் "பேச்சுகள் நடக்கின்றன; அமைச்சர்களாகிறார்கள்" என்பவையெல்லாம் வெறும் சுவாரஸ்ய செய்திகளாக மட்டுமே இருக்கின்றன. ஆனால், நாடு இன்று இருக்கும் அவதி நிலையில், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கு நாட்டை இயல்புநிலைக்குக் கொண்டுவர அவகாசம் கொடுக்கவேண்டும். அவசரப்பட்டு எதிர்ப்பு அரசியல் ஆர்ப்பாட்டங்களை செய்யக்கூடாதென தமிழ் முற்போக்குக் கூட்டணி நம்புகின்றனது - என கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி. ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது,

தேசிய அரசு அல்லது சர்வகட்சி அரசு அமைப்பது தொடர்பில் அதிகாரபூர்வ அழைப்பு வரவில்லை. ஆனால், கட்சித் தலைவர்களின்கூட்டத்தின்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்னிடமும், ஏனைய கட்சித் தலைவர்களிடமும் நேரடியாக இது பற்றி கூறினார். ஆனால், கட்சிகளுக்கு சர்வகட்சி அரசு அமைப்பது தொடர்பில் அரசாங்கத்திடமிருந்து அதிகாரபூர்வ அழைப்பு வரவேண்டும்.

அதன்பிறகு நாம் எமது கட்சிகள் மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி அரசியல் குழுக்கள் மத்தியில் இதுபற்றி பேசுவோம். அதேபோல் ஐக்கிய மக்கள் கூட்டணி தலைமைக்குழுவிலும் பேசுவோம். இதுதான் ஒரு பொறுப்புள்ள - நேர்மையுள்ள ஜனநாயக அரசியல் கட்சி செய்ய வேண்டிய முறைமை. அதை நாம் செய்வோம். எமது முடிவுகளை எமக்கு வாக்களித்து தெரிவு செய்துள்ள எமது மக்களின் நலன்களை முன்னிட்டு நாம் ஒற்றுமையாக எடுப்போம்.

அதேவேளை, நாடு இன்று இருக்கும் அவதி நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கு நாட்டை இயல்புநிலைக்குக் கொண்டுவர அவகாசம் கொடுக்க வேண்டும். அவசரப்பட்டு எதிர்ப்பு அரசியல் ஆர்ப்பாட்டங்களை செய்யக்கூடாதென தமிழ் முற்போக்கு கூட்டணி திடமாக நம்புகிறது. அதுவே எங்கள் மக்களின் நிலைப்பாடாகவும் இருக்கிறது. பெரும்பான்மை அரசியல் கட்சிகளின் நலன்களை சார்ந்து மாத்திரம் தமிழ் முற்போக்கு கூட்டணி அரசியல் செய்யாது.

அரசில் சேருகிறோமோ, இல்லையோ, புதிய அரசியலமைப்பு தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சருடன் நாம், மலையக தமிழ் இலங்கையர்களின் அரசியல் அபிலாஷைகளை முன்வைப்போம். அடுத்து வரும் அரசியலமைப்புத் திருத்தத்தில் எமது மக்களின் எதிர்பார்ப்புகளை இடம்பெறச்செய்ய எம்மாலானதை நாம் பொறுப்புடன் செய்வோம் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# சீனா செல்கிறார் ஜனாதிபதி ரணில்



இலங்கையின் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சீனாவுக்கு செல்ல திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா உள்ளிட்ட விடயங்களில் ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடுவதற்காக அவர் சீனாவிற்கு விஜயம் செய்ய திட்டமிட்டுள்ளதாக சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் பாலித கோஹன தெரிவித்துள்ளார்.

வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத் துறைக்கு உதவுமாறு சீனாவிடம் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் சர்வதேச ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தூதுவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொழும்பிலும் ஹம்பாந்தோட்டையிலும் சீனாவின் ஆதரவுடன் கூடிய பரந்த துறைமுகத் திட்டங்களுக்கு மேலதிக முதலீட்டை மேற்கொள்வதன் மூலம் பீஜிங், இலங்கைக்கு உதவ முடியும்.

சீனா தொடர்பில், புதிய அரசாங்கத்தின் கொள்கையில் எந்த அடிப்படை மாற்றமும் ஏற்படாதென எதிர்பார்க்கின்றோம்.

பல மாதங்களாக சீனாவிடமிருந்து 4 பில்லியன் அமெரிக்க டொலர் உதவிப் பொதிக்கு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

சீனாவின் இந்த நிதி உதவி குறித்த விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. எனினும், அடுத்த சந்திப்புக்கான திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

நிதி உதவிக்கு அப்பால், எரிபொருள், உரம் மற்றும் பிற அவசரத் தேவைப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கும் சீனா உதவ முடியும் என்று இலங்கை நம்புகின்றது - என்றார்.



வவுனியாவில் அமைந்துள்ள இந்து அன்பகம் சிறுவர் இல்லத்திற்கு சாவகச் சேரி பிரதேச சபை உறுப்பினர் வை.ஜெகதாஸ் ஊடாக அண்மையில் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. புலம்பெயர் நாட்டைச் சேர்ந்த அன்பர் ஒருவர் தனது சகோதரனின் ஞாபகார்த்தமாக 90 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருட்களை பிரதேச சபை உறுப்பினர் ஊடாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(படம் - சாவகச்சேரி நிருபர்)

# உணவுப் பொருட்களின் விலைகள் குறைந்தும் கிராமங்களுக்கு எடுத்துச்செல்ல முடியாத நிலை

## உணவு மொத்த சில்லறை வியாபாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

கிராமப் பகுதிகளுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை அத்தியாவசிய உணவு மொத்த - சில்லறை வியாபாரிகள் சங்கம் வர்த்தக அமைச்சர் நளீன் பெர்னாண்டோவிடம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக கொழும்பு புறக்கோட்டையிலுள்ள மொத்த வியாபாரிகள் அத்தியாவசிய உணவுப் பொருட்களை பல நாட்களாக எடுத்துச்செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, புறக்கோட்டையிலுள்ள மொத்த வியாபாரிகளின் பல அத்தியாவசிய உணவுப் பொருட்களின் மொத்த விலை நேற்று குறைந்திருந்தது.

ரூ.625 ஆக இருந்த ஒரு கிலோ பருப்பின் மொத்த விற்பனை விலை ரூ.460 ஆக குறைந்துள்ளது.

ஆனால், கிராமப்புறங்களில் ஒரு கிலோ பருப்பு 600 முதல் 700 ரூபா வரை பல்வேறு விலைகளில் விற்கப்படுகிறது.

புறக்கோட்டையில் ஒரு கிலோ சீனியின் மொத்த விற்பனை விலையும் நேற்று 12 ரூபாவால் குறைந்துள்ளது. ஒரு கிலோ சீனியின் மொத்த விலை 315 ரூபாவாக இருந்த நிலையில் அது 303 ரூபாவாகக் குறைந்துள்ளது.

மேலும், அரிசி விலையும் குறைந்துள்ளது. எரிபொருள் வழங்கினால், புறக்கோட்டையிலுள்ள மொத்த வியாபாரிகளிடம் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று கிராமப்புறங்களுக்கு விநியோகிக்க முடியும் என அகில இலங்கை அத்தியாவசிய உணவு மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

# அவசரகால நிலைமை பிரகடனம் தொடர்பான விவாதம் இன்று

நாடாளுமன்றம் இன்று மு.ப 10.00 மணிக்குக் கூடவிருப்பதுடன், பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதில் ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால நிலைமை அறிவிப்பு பி.ப 4.30 மணிவரை விவாதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவுள்ளது.

கடந்த 17ஆம் திகதிய 2288/30ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித் தல் மூலம் அப்போதைய பதில் ஜனாதிபதியினால் இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டதுடன், சட்ட விதிகளுக்கமைய அவசரகால நிலைமைப் பிரகடனம் 14 நாட்களுக்குள் நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்படாவிட்டால் இரத்தாகிவிடும்.

இலங்கையில் அவசரகால நிலைமை நிலவுவதன் காரணமாக பொதுமக்களின் பாதுகாப்பு, நாட்டின் அமைதியைப் பாதுகாத்தல், பொதுமக்கள் வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கல்கள் மற்றும் சேவைகள் என்பவற்றைப் பேணுவதற்குப் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைய இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டிருப்பதாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதால் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு தேர்தல்கள் ஆணைக் குழுவினால் பெயரிடப்பட்டுள்ள வஜிர அபேர்தன இன்று நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிப்பிரமாணம் செய்யவுள்ளார்.

# அதிவேக நெடுஞ்சாலைகளின் வருமானம் சடுதியாக வீழ்ச்சி

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக அதிவேக நெடுஞ்சாலைகளின் நாளாந்த வருமானம் 70 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கையிலுள்ள அதிவேக நெடுஞ் சாலைகள் மூலம் நாளாந்தம் 30 மில்லியன் ரூபாவரை வருமானம் கிடைக்கப்பெற்றுவந்த நிலையில், தற்போது அது 8 மில்லியன் ரூபா வரை குறைவடைந்துள்ளது.

இலங்கையில் இரு மாதங்களுக்கு மேலாக எரிபொருள் தட்டுப்பாடு நீடிக்கின்றது. எரிபொருளை பெறுவதற்கு பல நாட்கள் வரிசைகளில் காத்திருக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக அதிகளவான பயணிகள் தூர இடங்களுக்கு சொந்த வாகனங்களில் பயணிப்பதை கைவிட்டுள்ளனர். பொதுப் போக்குவரத்தையே அவர்கள் தெரிவுசெய்கின்றனர்.

மறுபுறத்தில் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் குழப்பநிலையால் சுற்றுலா செல்பவர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது.

அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கு வீட்டிலிருந்து வேலை செய்வதற்கான ஏற்பாடும் அமுலில் இருந்தது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அதிவேக நெடுஞ்சாலைகளின் வருமானம் சடுதியாக குறைவடைந்துள்ளது.

# 09 மில்லியன் ரூபா பெறுமதியான கடத்தல்

## தங்கம் – வலம்புரிச் சங்குடன் மூவர் கைது

*(மன்னார் நகர் நிருபர்)*

மன்னார், பேசாலை கடற்பரப்பில் நேற்று முன்தினம் (25) இரவு கடற்படையினர் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின்போது நாட்டிலிருந்து கடத்த முயன்ற சுமார் 470 கிராம் தங்கம் மற்றும் சங்கு (வலம்புரி) என்பவற்றுடன் சந்தேக நபர்கள் மூவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.



பேசாலை, தலைமன்னார் கடற்பரப்பில் நேற்று முன்தினம் (25) இரவு கடற்படையினர் விசேட ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன்போது பேசாலை கடற்கரையிலிருந்து சந்தேகத்திற்கிடமான வகையில் பயணித்த படகு ஒன்றை பரிசோதித்தனர்.

இதன்போது குறித்த படகிலிருந்து 470 கிராம் தங்கம் மற்றும் வலம்புரிச் சங்கு ஆகியவற்றை கடற்படையினர் மீட்டனர்.





குறித்த சம்பவத்துடன் ஈடுபட்ட 03 சந்தேக நபர்களை கைதுசெய்ததுடன், அந்தப் பொருட்களை கடத்த பயன்படுத்திய டிங்கி படகையும் கடற்படையினர் மீட்டுள்ளனர்.

இதற்கிடையில் இந்த நடவடிக்கையில் கைப்பற்றப்பட்ட தங்கத்தின் சந்தை பெறுமதி 09 மில்லியன் ரூபா என கடற்படையினர் தெரிவித்தனர்.

புத்தளம் மற்றும் பேசாலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 24 முதல் 39 வயதுக்குட்பட்டவர்களே இவ்வாறு கடற்படையினரால் கைதுசெய்யப் பட்டுள்ளனaf.

குறித்த சந்தேக நபர்கள், தங்கம், சங்கு மற்றும் படகுகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணத்திலுள்ள சுங்க அலுவலகத்தில் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# யாழ். பல்கலை கலைப்பீடம் நடத்தும் 'மானுடம் 2022' சர்வதேச ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடம் நடத்தும் 'மானுடம் 2022' சர்வதேச ஆய்வு மாநாடு எதிர்வரும் 29 மற்றும் 30ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது.

'மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் நூற்றாண்டு: தொடர்ச்சிகள், விலகல்கள், செல்நெறிகள்' என்னும் கருப்பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வு மாநாட்டுத் தொடரின் ஒருபகுதியாகக் கலைப்பீடம் இந்த மாநாட்டை ஒழுங்கமைத்துள்ளது.

இது தொடர்பாக, 'மானுடம் 2022' சர்வதேச ஆய்வு மாநாட்டின் அமைப்புக்குழு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் தற்போதைய நிலைமையை அது ஆரம்பிக்கப்பட்ட நூற்றாண்டுகால வரலாற்றின் வெளிச்சத்திலிருந்து அணுகுவதற்கும், விளங்குவதற்குமான ஒரு முயற்சியாகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் சர்வதேச ஆய்வு மாநாடு 2022 (Jaffna University International Research Conference 2022 (JUICE 2022)) இன் ஒரு துணை மாநாடாகவும், "மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் நூற்றாண்டு: தொடர்ச்சிகள், விலகல்கள், செல்நெறிகள்" என்ற கருப்பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம், மானுடம் ஆராய்ச்சி மாநாடு - 2022இனை இம்மாதம் 29 மற்றும் 30ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

நாடு ஒரு பெருந்தொற்றுநோயின் பிடியிலும், நாட்டின் கல்வி உட்பட பல்வேறு துறைகள் பெருந்தொற்று ஏற்படுத்திய நெருக்கடிகளிலும் தத்தளித்துக்கொண்டிருக்கும் ஒரு சூழலில் இலங்கையில் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் மூன்றாம் நிலைக்கல்வி ஆரம்பிக்கப்பட்டதன் நூறு ஆண்டுகளின் (1921 – 2021) பூர்த்தி இடம்பெற்றிருக்கிறது.

புரட்சிகரமான திறவுகள் மற்றும் நெருக்கடிமிக்க சவால்களை உள்ளடக்கிய இந்த நூற்றாண்டுகால வரலாற்றை மீட்டுப் பார்த்து, அதனை விசாரணை செய்யும் செயன்முறைகளின் ஒரு பகுதியாகவும், மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் தற்போதைய நிலைமையை இந்த வரலாற்றின் வெளிச்சத்தில் இருந்து அணுகுவதற்கும், விளங்குவதற்குமான ஒரு முயற்சியாகவும் இந்த சர்வதேச ஆய்வு மாநாடு அமையும்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை (29ஆம் திகதி) மாலை 3.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாகும் தொடக்க நிகழ்விற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

மாநாட்டின் பிரதான ஒழுங்கமைப்பாளர் கலாநிதி ரி.சனாதனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் கே.சுதாகர், ஆய்வு மாநாட்டின் பிரதம ஆசிரியர் கலாநிதி எம்.திருவரங்கன் ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

மாநாட்டின் முக்கிய உரைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் முதலாவது பீடாதிபதியான வரலாற்றுத்துறைப் பேராசிரியர் கே. இந்திரபாலா 'யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மனிதப் பண்பியற் கற்கைகள் : முதற் பத்தாண்டுகள் (1974 – 1984)' என்னும் தலைப்பிலும், இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் சுஜித் சிவசுந்தரம் 'இலங்கையில் மானுடர்களும் சூழல்களும்' என்னும் தலைப்பிலும் நிகழ்த்தவுள்ளனர். நன்றியுரையினை மாநாட்டின் செயலாளர் அபிராமி ராஜ்குமார் நிகழ்த்துவார்.

தொடர்ந்து, மாநாட்டின் பிரதான நிகழ்வுகளான குழு நிலைக்கலந்துரையாடல்களும் ஆய்வுக்கட்டுரை அமர்வுகளும் அடுத்த நாள் சனிக்கிழமை (30ஆம் திகதி) முழு நாள் அமர்வுகளாக இடம்பெறவுள்ளன. இந்த அமர்வுகளில் பின்வரும் கருப்பொருட்களில் ஆய்வுக்கட்டுரைகள் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கலைஞர்கள், செயற்பாட்டாளர்களால் முன்வைக்கப்படவுள்ளன.


திகதி 25.07.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4827
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,244,640.00
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 7 4 7 3 1 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,261,545.00

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3069
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,305,420.00
ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 01 50 63 73
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,129,491.20

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1305
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,483,380.00
வெற்றி இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 7 1 2 4 5 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,542,600.40

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 857
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,903,480.00
வெற்றி இலக்கினம் R வெற்றி இலக்கங்கள் 02 32 36 53
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 118,953,551.20

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 136
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,887,820.00
இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 12 24 26 46 விசேட இலக்கினம் விருச்சிகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,347,372.80

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1175
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,187,140.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 262,328,654.00
V 02 46 49 64 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

# மட்டக்களப்பில் சிசு ஒன்றை கொலைசெய்து கிணற்றில் வீசிய தாய் கைது

## குழந்தையின் தந்தையென மரபணு பரிசோதனையில் உறுதியான வைத்தியர் ஒருவரும் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் வைத்தியர் ஒருவரின் வீட்டில் வேலைக்காரியாக கடமையாற்றிவந்த பெண் ஒருவருக்கு பிறந்த சிசு ஒன்றை கிணற்றில் வீசி கொலை செய்த சம்பவம் தொடர்பான மரபணு பரிசோதனையை அடுத்து குழந்தை தனக்கு பிறந்ததென மறைத்த குற்றச்சாட்டின்பேரில் குறித்த வைத்தியரை நேற்று முன்தினம் (25) கைதுசெய்துள்ளதாக மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்ட குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த வைத்தியர் ஒருவர், வீடு ஒன்றை வாடகைக்குப் பெற்று தங்கியிருந்து கடமையாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில், அவர் அம்பாறை மத்திய முகாமைச் சேர்ந்த (38 வயது) பெண் ஒருவரை தனது வீட்டுக்கு வேலைக்கு அமர்த்திய நிலையில், 2017 மார்ச் 26ஆம் திகதி குறித்த வேலைக்காரிக்கு ஆண்பிள்ளை ஒன்று பிறந்துள்ளது. இதனையடுத்து குறித்த சிசுவை சீலையால் சுற்றி வீட்டின் கிணற்றில் வீசப்பட்டுள்ள நிலையில், வேலைக்கார பெண்ணுக்கு தொடர்ந்து இரத்தப்போக்கு ஏற்பட்டதன் காரணமாக மார்ச் 26ஆம் திகதி மட்டு. போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து 2017 மார்ச் 31ஆம் திகதி தனது கிணற்றுத் தண்ணீரில் துர்நாற்றம் வீசுவதாக பொலிஸாருக்கு வைத்தியர் முறைப்பாடு செய்ததையடுத்து, பொலிஸார் கிணற்றை சோதனையிட்டபோது, கிணற்றிலிருந்து சிசுவின் சடலத்தை மீட்டதுடன், வேலைக்காரியை கைதுசெய்தனர்.

குறித்த குழந்தை தனக்கும் வைத்தியருக்கும் பிறந்ததாகவும் வைத்தியர்தான் வீட்டில் மகப்பேற்றை நடத்தியதாகவும் பின்னர் சிசுவை தான் கிணற்றில் வீசியதாகவும் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்ததையடுத்து, அவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இதேவேளை, தனக்கும் இதற்கும் குழந்தைக்கும் தொடர்பில்லை என வைத்தியர் தெரிவித்த நிலையில், நீதிமன்ற உத்தரவுக்கமைய குழந்தையின் இரத்த மாதிரியும் வைத்தியரின் இரத்தமாதிரியையும் பெற்று அரச பகுப்பாய்வுக்கு மரபணு பரிசோதனைக்கு அனுப்பிவைக் கப்பட்டது.

இந்த மரபணு பரிசோதனையில் குறித்த வைத்தியரின் இரத்த மாதிரியும் சிசுவின் இரத்த மாதிரியும் ஒன்று எனவும் வைத்தியருக்கு பிறந்த குழந்தை எனவும் பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்ட அறிக்கையை அரச பகுப்பாய்வுத் திணைக்களம் பொலிஸாருக்கும் நீதிமன்றிற்கும் அனுப்பியுள்ளது.

இதனையடுத்து மட்டு. பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பரிசோதகர் சந்திரகுமார தலைமையிலான பொலிஸார் தொடர் விசாரணையில் நேற்று முன்தினம் கண்டி வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் குறித்த வைத்தியரை பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து, தனக்கு பிறந்த குழந்தை என மறைத்த குற்றச்சாட்டின்பேரில் அவரை கைதுசெய்ததுடன், அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த வேலைக்காரி பெண் நீதிமன்ற பிணையில் வெளிவந்துள்ளதுடன், ஏற்கனவே அவருடைய சகோதரியின் கணவருக்கு பிறந்த குழந்தையை கொலை செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு, தொடர்ந்து வழக்கு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருக்கோவிலில் எரிவாயு திருடிய மூவருக்கு எதிர்வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியல்

(கோணாவத்தை நிருபர்)

திருக்கோவில் பிரதேசத்தில் எரிவாயு திருடிய நபர்களை எதிர்வரும் ஐந்தாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இருபதாயிரம் ரூபா பெறுமதியான இரண்டு எரிவாயு வீட்டிலிருந்து காணாமல் போயுள்ளது. வீட்டு உரிமையாளர்கள் இரவு நேரத்தில் கோவில் திருவிழாவுக்கு சென்று பின்னர் வீட்டுக்கு வந்து பார்த்தபோது எரிவாயு காணாமல்போயிருந்தமை தெரிய வந்தது. சந்தேகத்தின்பேரில் மூன்று பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரையும் மேலதிக நீதவான் நீதிமன்ற நீதிபதி கே.எல்.எம்.சாஜீத் முன்னிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (24) ஆஜர்செய்தபோது ஐந்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விட்டுள்ளார்.

# வாழைச்சேனையில் இடி மின்னல்; மின்சாரப் பொருட்கள் பல சேதம்!





(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு, வாழைச்சேனையில் நேற்று முன்தினம் (25) பிற்பகல்வேளை ஏற்பட்ட இடி மின்னல் தாக்கம் காரணமாக பிரதேசத்தில் மின்சாரப் பொருட்கள் பல சேதமடைந்துள்ளன.

வாழைச்சேனை விநாயகபுரத்தில் பிற்பகல் 1.30 மணியளவில் இரண்டு வீடுகளில் இச்சம்பவம் ஏற்பட்டுள்ளது. வளவிலுள்ள தென்னை மரங்களில் இடி மின்னல் தாக்கத்தினை ஏற்படுத்தி தீப்பற்றியுள்ளது. தீயானது வீட்டின் கூரையின்மீது பரவியதனையடுத்து சம்பவம் அறிந்த அயலவர்கள் தீ பரவாமல் தடுத்துள்ளனர். இதனால் வீட்டில் சேதம் ஏற்படாமல் தடுத்துள்ளனர்.

இதேவேளை, குறித்த வீடுகளில் வசித்தோர் உறவினர்களின் வீடுகளுக்கு சென்றிருந்ததால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படாமல் தடுக்கப்பட்டுள்ளது. ஆனால், குறித்த பிரதேசத்தில் பல வீடுகளில் பாவனையிலிருந்த மின்சாரப் பொருட்கள் பல சேதமடைந்துள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர். அத்துடன், மக்கள் அச்சமடைந்து காணப்படுகின்றனர்.

நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் பல இடங்களில் இருளுடன் கூடிய காலநிலை நிலவியதுடன் தூறல் மழையும் பெய்தது.

# கிழக்கு மாகாணத்தின் அதியுயர் பதவியான RSM பதவியை பெற்ற ஓட்டமாவடி மத்திய கல்லூரி

(மட்டக்களப்பு நிருபர்)



கிழக்கு மாகாணத்தில் கடேட் மாணவன் ஒருவருக்கு வழங்கப்படுகின்ற அதியுயர் பதவியான RSM (Regiment Segeant Major) பதவியை மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் ஓட்டமாவடி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) சுவீகரித்துக்கொண்டது.

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலுள்ள 17 கல்வி வலயங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட கடேட் மாணவர்களுக்கான நேர்முகப்பரீட்சை கடந்த 20.07.2022ஆம் திகதி புதன்கிழமை 38ஆவது தேசிய மாணவர் படையணியின் தலைமைக் காரியாலயத்தில் கிழக்கு மாகாண பிரதிப் பணிப்பாளர் கேர்ணல் அனுரகுமார தலைமையில் நடைபெற்றது.

இப்பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று ஓட்டமாவடி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவன் ஹன்சுல் ரஹ்மான் தெரிவுசெய்யப்பட்டார்.

இது கிழக்கு மாகாணத்தின் முதலாவது பதவியென்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கான ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும் இருந்த வலயக் கல்விப் பணிப்பாளர் டொக்டர் எஸ்.எம்.எம்.எஸ் உமர் மௌலானாவுக்கும், பாடசாலை அதிபர் எம்.ஏ.ஹலீம் இஸ்ஹாக், மட்டக்களப்பு மத்தி கல்வி வலய கடேட் பொறுப்பாளர் எஸ்.எல்.எம்.இனாமுல்லாஹ் ஆசிரியர் மற்றும் பிரதி, உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கும் பாடசாலை சார்பாக நன்றி தெரிவித்துள்ளனர்.

# திருகோணமலையில் 9 இலட்சம் பெறுமதியான வீட்டு உபகரணங்களை திருடிய எண்மர் கைது






(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஒன்பது இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டு உபகரணங்களை திருடிய எட்டுப்பேரை நேற்று முன்தினம் (25) கைதுசெய்துள்ளதாக திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மற்றும் பாலையூற்று பகுதியைச் சேர்ந்த 25 வயதிலிருந்து 45 வயதுக்குட்பட்ட எட்டுப்பேரையே இவ்வாறு கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை பகுதியுள்ள வீடொன்றினை உடைத்து மின்விசிறி, தையல் இயந்திரம், ஒலிபெருக்கி சாதனங்கள், இசைக்கருவி மற்றும் மின்னமுத்தி போன்ற உபகரணங்களை திருடி விற்பனை செய்துள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களை தடுத்துவைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# சாரணர் துறையில் தேசிய விருது

## கிழக்கில் எண்மர் தெரிவு



(கோணாவத்தை நிருபர்)

இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் தேசிய சாரணர் விருது வழங்கும் நிகழ்வு நீர்கொழும்பு கோல்டி சாண்ட்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது. அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்திலிருந்து எட்டு பேருக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

பிரதம சாரணர் ஆணையாளர் சட்டத்தரணி ஜனபரித் பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பல மாவட்டங்களிலிருந்து சாரணத் தலைவர்கள் கலந்துகொண்டனர். சாரணர் சேவையில் பல வருடங்களாக சேவையாற்றிய சாரணத் தலைவர்களை தெரிவுசெய்து சேவைக்கேற்ற வகையில் விருதுகள் வழங்கப்பட்டன.

அக்கரைப்பற்று, கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்திலிருந்து எட்டு பேர் தெரிவு செய்யப்பட்டனர். சங்கத்தின் தவிசாளர் யூ.எல்.எம்.ஹாசீம், உதவி மாவட்ட சாரண ஆணையாளர்களான எம்.ஐ.உதுமாலெவ்வை, எம்.எப்.றிபாஸ், எம்.எச்.ஹம்மாத், எம்.இப்றாஹீம், ஏ.நாஜாயிஸ், எஸ்,தஸ்தகீர், சலாம் ஆகியோர் விருதினை பெற்றுக்கொண்டனர்.

# இலக்கியவாதி கலைக்கோட்டன் எனப்படும் இருதயநாதன் மட்டக்களப்பில் காலமானார்

(வெல்லாவெளி நிருபர்)




கலைக்கோட்டன் என அழைக்கப் படுபவரும் இலக்கியத்துறையில் தடம்பதித்தவரும், மட்டக்களப்பு மாவட்ட சாரண ஆணையாளருமான அழகையா இருதயநாதன் மட்டக்களப்பில் நேற்று முன்தினம் (25) இறைபதமடைந்தார்.

மட்டக்களப்பு பாலமீன்மடு கிராமத்தில் 1949.05.17ஆம் திகதி அழகையா தம்பதிகளுக்கு மகனாக பிறந்துள்ளார். அதன் பின்னர் ஆசிரியையான தயாநிதியை கரம்பிடித்து மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர், தனது ஆரம்பக்கல்வியை பாலமீன்மடு கிராமத்தின் அரசினர் பாடசாலை யிலும் இடைநிலைக்கல்வியையும், உயர்தரக் கல்வியையும் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும் படித்து தமது ஆசிரியர் நியமனத்தை பெற்றுக்கொண்டார்.

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் மாணவர்களுக்கு ஆசிரியர் பணியை முன்னெடுத்தார். அதன்பின்னர் அதிபர் பரீட்சையில் சித்தியடைந்து மட்டக்களப்பு நரிப்புல்தோட்டம் அரசினர் பாடசாலை, மகிழவெட்டுவான் மகா வித்தியாலயம், மட்டக்களப்பு திரேசா பெண்கள் பாடசாலை, பாலமீன்மடு அரசினர் பாடசாலைகளில் அதிபராக இருந்து காத்திரமான கல்விப்பணிகளை செய்து ஓய்வுபெற்றுள்ளார்.

தனது தந்தையார் ஒரு கூத்துக்கலைஞராக சமூக மட்டத்தில் திகழ்ந்து சமுதாய ரீதியான சமூக சீர்திருந்த விடயங்களை கருப்பொருளாக வைத்து பல கூத்துகளை அரங்கேற்றினார். தனது தந்தையாரின் கலைத்துறையில் இருந்த ஆர்வத்தினை கலைஞர் கலைக்கோட்டன் வாழையடி வாழையாக பின்பற்றினார்.

இலக்கியத்துறையில் கவிதை, சிறுகதை, நாடகம், சினிமா கூத்துக்கலை, குறுந்திரைப்படங்கள் படைத்தல், தொலைக்காட்சி நாடகங்களை எழுதுதல், இசை அமைத்தல், இசைக்கோர்ப்பு செய்தல், சாரணர் வேலைத்திட்டம் என தன்னை அர்ப்பணித்து கலைத்துறை உலகில் சிறந்து விளங்கினார். இவருடைய சிறுகதைக்கு கிழக்கு மாகாண கல்வி, கலாசார, பண்பாட்டு திணைக்களத்தினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கிழக்கு மண்ணின் ஒரு மாபெரும் கலைஞனாக இருந்து மறைந்திருக்கிறார் என்பது கலைத்துறை உலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். எல்லா துறைகளுக்கும் தன்னை ஆழப்பதித்ததால் கலைக்கோட்டன் என துறைப்பெயரோடு அழைக்கப்படும் அழகையா இருதயநாதன் கவிதை, சிறுகதை, இலக்கியம், நாடகம் சினிமா கூத்துக்கலை, குறுந்திரைப்படம் என எல்லா துறைகளிலும் சரளமானவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கிழக்கின் பாலமீன்மடு தந்த இன்னுமொரு கலைஞன். இவருடைய கலைத்துறை இடம் நிரப்புதல் கடினமே. அவர் ஆன்மா நிம்மதியில் இளைப்பாறட்டும்.

# அட்டாளைச்சேனையில் ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கோணவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனையில் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின்படி உப பொலிஸ் பரிசோதகர் நூர்தீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்திற்கு சென்று சந்தேகநபரை கைதுசெய்துள்ளதுடன், அவரிமிருந்து 570 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப் பட்டுள்ளது.

சந்தேகநபரை அக்கரைப்பற்று மேலதிக மாவட்ட / நீதவான் நீதிமன்ற நீதிபதி கே.எல்.எம்.சாஜீத் முன்னிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (24) ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் ஐந்தாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பு வாகரை பழங்குடியினருக்கு உலருணவுப்பொருட்கள் பகிர்ந்தளிப்பு



(மட்டக்களப்பு நிருபர்)

வாழ்வின் சக்தி திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை பழங்குடியினருக்கு உலருணவுப் பொருட்களை நேற்று முன்தினம் (25) கையளித்தது.

இந்த திட்டத்துடன் எல்.ஓ.எல்.சி. குழுமம் கைகோர்த்துள்ளதுடன், நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி சூழ்நிலையில், உதவிகள் தேவைப்படுவோருக்கு உலருணவுப் பொருட்களை பகிர்ந்தளிக்கும் வகையில், வாழ்வின் சக்தி திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகளில் மக்களுக்கான உலருணவுப்பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. செங்கலடி, புலையவெளி மற்றும் பன்குடாவெளி தளவாய் ஆகிய இரு கிராமங்களின் கிராம அபிவிருத்தி சங்க கட்டிட வளாகத்தில் நேற்றுக் காலை உலருணவுப்பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

அத்துடன், வாகரை குஞ்சங்கற்குளம் பகுதியில் பழங்குடியினருக்கும் உலருணவுப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. எல்.ஓ.எல்.சி. குழும உத்தியோகத்தர்களும்



வாழ்வின் சக்தி திட்டத்தில் பங்கேற்று மக்களுக்கான உலருணவுப்பொருட்களை பகிர்ந்தளித்திருந்தனர்.

# வீடற்ற தம்பதிகளுக்கு வீடு அன்பளிப்பு

(கிண்ணியா நிருபர்)




திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட நடுத்தீவு பிரதேசத்தில் வீடற்ற தம்பதிகளுக்கான வீடு அண்மையில் கையளிக்கப்பட்டது.

அல்ஹிந்மதுல் உம்மா பௌண்டேசனினால் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்ட இவ்வீடானது, துருக்கி தொண்டு நிறுவனமான IHHNL இன் இலங்கைக்கான தூதுவர் முஸ்தபா குருவினால் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அல்ஹிந்மதுல் உம்மா பௌண்டேசனின் தலைவர் முகம்மட் பாத்திஹ் கஸ்ஸாலியும் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

# மகிழடித்தீவில் தூக்கில் தொங்கி உயிரிழந்த நிலையில் குடும்பஸ்தரொருவர் சடலமாக மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டு. கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள மகிழடித்தீவு பிரதேசத்தில் காளிகோவில் ஆலமரத்தில் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துகொண்ட நிலையில், ஆணொருவர் சடலமாக நேற்று முன்தினம் (25) காலையில் மீட்கப்பட்டுள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

மகிழடித்தீவு பாடசாலை வீதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 37 வயதுடைய குமாரசாமி திலகேஸ்வரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் குடும்பப் பிரச்சினை காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வீட்டின் கிணற்றில் குதித்து தற்கொலைக்கு முயற்சித்த நிலையில், அங்கிருந்து காப்பாற்றப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து குறித்த நபரின் மனைவி நேற்று முன்தினம் (25) அதிகாலை ஆடைத்தொழிற்சாலைக்கு வேலைக்கு செல்ல எழுந்து கணவரை தேடியபோது அவரை வீட்டில் காணவில்லை. எனவே, அவர் அருகில் வெளியே சென்றிருக்கலாம் என நினைத்து அவர் வேலைக்கு சென்றுள்ளார்.

இந்நிலையில், 8.30 மணிக்கு அந்தப் பகுதியிலுள்ள காளிகோவில் மூலஸ்தானப் பகுதியிலுள்ள ஆலமரத்தில் தூக்கில் தொங்கி, தற்கொலை செய்துகொண்ட நிலையில், அங்கிருந்து சடலமாக மீட்கப்பட்டதையடுத்து, நீதிமன்ற உத்தரவுக்கமைய சடலத்தை பிரேத பரிசோதனைக்காக மட்டு. போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# எரிபொருள் நிலையத்தில் கடமையிலிருந்த பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு பொலிஸார் இடையூறு

## இடைநடுவே வெளியேறிச் சென்ற அதிகாரிகள்






(மட்டக்களப்பு நிருபர்)

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமையி லீடுட்டிருந்த பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள் பொலிஸாரின் தலையீட்டினால் இடைநடுவே வெளியேறியதாக தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென்எருவில்பற்று பிரதேசத்திற்குட்பட்ட களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் (25) எரிபொருள் வழங்கப்பட்டது.

பிரதேச செயலகத்தினால் அறிமுகப்படுத் தப்பட்ட குடும்ப விநியோக அட்டையின் பிரகாரம் எரிபொருள் பெறுவதற்கு இதன்போது வருகை தந்திருந்தவர்களை பிரதேச செயலக அதிகாரிகள் பதிவுசெய்த பின்னர் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள மோட்டார்சைக்கிளுக்கு 1500 ரூபாவிற்கும், முச்சக்கரவண்டிக்கு 2000 ரூபாவிற்கும், கார்களுக்கு 7000 ரூபாவிற்கும் எரிபொருள் வழங்கப்பட்டதாக பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், குடும்ப அட்டையில் பதிவீடு செய்த பின்னர் ஒவ்வொருவருக்கும் சுமுகமாக எரிபொருள் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தபோது இடைநடுவே பொலிஸாரின் தலையீடு காரணமாக தம்மால் தொடர்ந்து மேற்குறித்த நடைமுறையின்கீழ் மக்களுக்கு எரிபொருள் வழங்குவதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியாமல் போனதாகவும், அங்கிருந்த பாதுகாப்புத் தரப்பினரால் அரச உத்தியோகத்தர்கள், அச்சுறுத்தல்களுக்கு உட்பட்ட காரணத்தினாலும், அக்கடமை யிலிருந்து இடைநடுவே வெளியேறியதாகவும் பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

எரிபொருள் யாவருக்கும் வழங்கவேண்டும், குறிப்பாக, தூர இடங்களிலிருந்து வருபவர்கள், குடும்ப அட்டை வைத்திருக்கமாட்டார்கள். இந்நிலையில் அவர்களுக்கும் எரிபொருள் வழங்கவேண்டும், எனவே, தாம் அனைவருக்கும் சீராக எரிபொருள் வழங்குவதற்குரிய கடமைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் இதன்போது தெரிவித்தனர்.

எது எவ்வாறு அமைந்தாலும், அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மோட்டார்சைக்கிளுக்கு 1500 ரூபாவிற்கும், முச்சக்கரவண்டிக்கு 2000 ரூபாவிற்கும், கார்களுக்கு 7000 ரூபாவிற்கும் எரிபொருள் வழங்கும் செயற்பாடுகளுக்கு மாறாக சிலர் செல்வாக்கைப் பயன்படுத்தி தங்களுடைய வாகனங்களின் எரிபொருள் கொள்ளளவு நிரம்பும் வரையில் எரிபொருட்களை நிரப்பிச் செல்வதனாலும், வரிசை ஒழுங்குகளை மீறி சிலர் எரிபொருட்களைக் கொள்வனவு செய்வதனாலும், நாட்கணக்கில் காத்திருக்கும் மக்களுக்கு எரிபொருளின்றி திரும்பிச் செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனினும் அரசாங்கம் கியு.ஆர். கோட் அடிப்படையில் அனைவருக்கும் சீரான முறையில் எரிபொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மறைந்த மர்ஹூம் மன்சூரின் 5ஆம் ஆண்டு நினைவுதினத்தில் விசேட துஆ பிரார்த்தனை




(பெரியநீலாவணை நிருபர்)

முன்னாள் வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர்.எம்.மன்சூர் மரணித்து 05 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இவரது நினைவாக நேற்று முன்தினம் (25) கல்முனை முகையதீன் ஜும்ஆ பள்ளிவாசலில் விசேட துஆ பிரார்த்தனை நடைபெற்றது.

இவர் 1977ஆம் ஆண்டு கல்முனைத் தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு 5547 அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்று நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

1979ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்ட அமைச்சராகவும் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். இது இலங்கை வரலாற்றில் தமிழ் - முஸ்லிம் உறவின் வலிமை பொருந்திய காலமாகக் காணப்பட்டது. 1994ஆம் ஆண்டு அரசியலிலிருந்து ஓய்வு பெறும் வரைக்கும் நாடாளுமன்றத்திலும் நாடாளுமன்றத்திற்கு வெளியிலும் பல பதவிகளை வகித்து சேவையாற்றினார்.

இவரது சேவையை தொடர்ந்தும் முன்னெடுக்கும் நோக்கில் ஏ.ஆர்.எம்.மன்சூர் பௌண்டேஷன் எனும் சமூக அமைப்பு உருவாக்கப்பட்டு பல்வேறு சமூகநல வேலைத்திட்டங்களும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த விசேட துஆ பிரார்த்தனையை பள்ளிவாசல் பேஸ் அஷ்ஷெய்க் எம்.ஜெப்றான் மௌலவி நிகழ்த்தியதுடன், இதில் ஏராளமான பிரதேச பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# தம்பலகாமத்தில் 2 மாதங்களுக்குப் பிறகு லிட்ரோ சமையல் எரிவாயு விநியோகம்





(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சிரிஜ் நகர் 97ஆம் கட்டை சந்தியில் லிட்ரோ எரிவாயு நேற்று முன்தினம் (25) மாலை விநியோகிக்கப்பட்டது.

சுமார் இரண்டு மாதங்களுக்கும் மேலாக சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் கொட்டும் மழையிலும் மிக நீண்ட வரிசையில் காத்திருந்து இதனைப் பெற்றனர். 850 எரிவாயு இதன்போது மே மாத மின்சார பட்டியலை வைத்து வழங்கப்பட்டன.

# “சிந்தனை மாமணி” விருது பெற்றார் எழுத்தாளர் யூ.எல். உம்மு மஜினா




(பொலிவேரியன் நிருபர்)

மாவடிப்பள்ளியைச் சேர்ந்த எழுத்தாளர் உமறுலெப்பை உம்மு மஜினா சிந்தனை மாமணி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளான ஜூலை 15ஆம் திகதியை முன்னிட்டு, திண்டுக்கல் பசுமை வாசல் பவுண்டேஷன், குமரி மாவட்ட தமிழ்நாடு பனைமரம் காக்கும் பாதுகாப்பு இயக்கம், கன்னியாகுமரி மாவட்ட காமராஜர் இளைஞர் வளர்ச்சிப் பேரவை, சேலம் மாவட்ட ஆத்தூர் ஸ்ரீ சக்ஸஸ் அகடமி & பவுண்டேஷன் ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய பல்துறை சாதனையாளர்களுக்கான “பெருந்தலைவர் காமராஜரின் மாமணி விருதுகள் - 2022” வழங்கும் நிகழ்வில் இலக்கியத் துறையில் ஆற்றிவரும் சிறந்த பங்களிப்புக்காக இலங்கையிலிருந்து கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் மாவடிப்பள்ளி எனும் ஊரைச் சேர்ந்த எழுத்தாளர் உமறுலெப்பை உம்மு மஜினா சிந்தனை மாமணி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

## போடியார் புலம்பல்!



நாட்டை கட்டி எழுப்ப ஜனாதிபதி ரணிலுக்கு கால அவகாசம் வேணுமாம் எண்டு சொல்லுறாங்க எலுவா..? அவரால நாட்டையும் கட்டேலா.., நாயையும் கட்டேலா.. முடிச்சா நரிவேல மட்டும்தான் பார்த்து குழவெட்டலாம் அதுக்குள அடுத்த ஜனாதிபதி வந்திடுவாரு.. ஒண்டுமே இந்த மனுசனால ஒப்பேத்த ஏலாது ..!

# இலுப்படிச்சேனை காட்டில் ஆணொருவரின் சடலம் மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள இலுப்படிச்சேனை காட்டுப்பகுதியில் உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் நேற்று முன்தினம் (25) இரவு மீட்கப்பட்டுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனா.

குறித்த காட்டுப்பகுதியில் சடலம் ஒன்று இருப்பதாக விறகுவெட்டச் சென்றவர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து, உருக்குலைந்த நிலையில் இருந்த சடலத்தை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக செங்கலடி வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் 10 நாட்களுக்கு முன் உயிரிழந்திருக்கலாம் எனவும் குறித்த சடலம் தொடர்பாக அடையாளம் தெரிந்தவர்கள் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மத குருமார்களுக்கு தடையின்றி வழங்கவேண்டும்

## கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியத்தின் செயலர் சிவஸ்ரீ குகநாதஐயர்

(கல்லடி நிருபர்)

தற்பொழுது நாட்டில் நிலவுகின்ற எரிபொருள் பற்றாக்குறை காரணமாக எங்களுடைய சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அந்தச் சமூகத்துக்குச் சேவையாளனாக விளங்குகின்ற குருமார்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் சம்பந்தமாக நாங்கள் அரச மட்டத்திற்கு கொண்டு செல்வதற்காகவே இந்த ஊடகச் சந்திப்பை ஒழுங்கு செய்துள்ளோம் - என கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியத்தின் செயலாளர் சிவஸ்ரீ சி.குகநாதஐயர் தெரிவித்தார்.

இவ்வூடகச் சந்திப்பு மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாயில் அமைந்துள்ள கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியத் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம்(25) இடம்பெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டவை வருமாறு:-

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் பெறுவதற்காக குருமார் செல்லும்போது, அங்கே குருமார்கள் புறக்கணிக்கப்படுவதும், சமூகத்தால் வெறுத்து ஒதுக்கப்படுவதுமான செயற்பாடுகளால் இந்துக் குருமார் எரிபொருளைப் பெறாமலேயே வீடு செல்லும் நிலையே காணப்படுகிறது. இதனைக் குறிப்பிட்டு மட் டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்துக்கு கடந்த மாதம் எமது ஒன்றியத்தால் பல கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றினைக் கையளித்திருந்தோம். இதன்போது மேலதிக அரசாங்க அதிபரால் நாட்டிற்கு எரிபொருள் வருகின்றபோது, உங்களுக்குத் தேவையான எரிபொருளை வழங்குவதற்கு குறிப்பிட்ட எரிபொருள் நிலையங்களுக்கு அறிவுறுத்தல் வழங்குவோம் என்ற உறுதிமொழி வழங்கப்பட்டது.

தற்போது அனைத்து எரிபொருள் நிலையங்களுக்கும் போதியளவு எரிபொருள் வந்துகொண்டிருக்கிறது. அதனை மக்களும் தங்களது வாகன இலக்கத் தகட்டின் கடைசி இலக்கத்துக்கமைய பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதன்போது பல முறைகேடுகளும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில், இந்துக் குருமார்கள் தமது பூசைக் கடமைகளுக்காகவும், சமூக மேம்பாட்டுக்காகவுமே எரிபொருளைப் பெற செல்கிறோம். மத வழிபாட்டினை முன்னின்று நிகழ்த்த அனைவரும் முன்வருவதில்லை. ஒரு சிலரே முன்வருகின்றனர். எனவே, அவர்கள் அக்கடமைகளைச் செவ்வனே நிகழ்த்த சமூகத்திலுள்ளவர்கள் உறுதுணையாகச் செயற்பட வேண்டும். அத்தோடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பணிபுரியும் பொலிஸாரும் இடையூறாகச் செயற்படுகின்றனர். இவற்றோடு பௌத்த குருமார்களுக்கு வழங்கப்படும் உன்னதமான நிலை ஏனைய மத குருமார்களுக்கு வழங்கப்படுவதில்லை.



இனிவரும் காலங்களில் எமக்கான எரிபொருளை வழங்க இந்நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், அரச அதிகாரிகள் சம்பந்தப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குப் பணிப்புரை வழங்க வேண்டும். அவ்வாறு செய்யாதபட்சத்தில் நாம் நீதி கோரி வீதிக்கிறங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் - என்றார்.

கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ கணேசலோகநாதக் குருக்கள் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டவை வருமாறு:-

கொரோனாத் தொற்று காலத்தில் இந்துக் குருமார்கள் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் ஆலய பூசை வழிபாடுகளை உரிய வகையில் நிகழ்த்தினர். இந்நிலையில், எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பூசை வழிபாடுகளை நிகழ்த்தவேண்டியுள்ளது. எரிபொருள் நிரப்பச் செல்கையில் பல்வேறு இடர்கள், இன்னல்கள் மற்றும் கசப்பான சம்பவங்களை எதிர்கொள் கின்றனர்.

எரிபொருள் நிலையங்களில் சமூகத்திலுள்ள ஏனையோர்போன்று வரிசையில் நின்று எரிபொருள் பெற முடியாது. ஏனெனில், காலை, மதியம், பிற்பகல் பூசை வழிபாடுகளை நிகழ்த்த செல்லவேண்டியுள்ளது.

ஒரு குருவானவர் ஐந்து, ஆறு ஆலயங்களுக்குச் சென்று பூசை செய்யவேண்டியுள்ளது. இந்நிலையில், எரிபொருள் உரியவேளையில் கிடைக்காதபட்சத்தில் பூசை வ்ழிபாடுகளை உரிய காலவேளையில் நிகழ்த்த முடியாமல் போய்விடும். இதனால் தெய்வக் குற்றத்துக்கு ஆளாகவேண்டியேற்படும்.

மதத்தை இழிவுபடுத்தும் செயற்பாடுகளில் சில அரச அதிகாரிகள் ஈடுபடுகின்றனர். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இத்தகையோருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

# ரஷ்ய ஆயுதக் கிடங்குகள் மீது உக்ரைன் படையினர் தாக்குதல்

## பாரிய சேதம் ஏற்பட்டிருக்கலாம் எனத் தகவல் ; ரஷ்யப்படையினர் மறுப்பு



உக்ரைனுக்கு மேற்கத்தேய நாடுகள் வழங்கிய ஹிமார்ஸ் எனப்படும் அதிநவீன ஏவுகணைகள் மூலம் உக்ரைன் இராணுவம் நடத்திய தாக்குதலில் ரஷ்யாவின் 50 ஆயுதக்கிடங்குகளை அழித்துள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

எனினும், இந்த விடயத்தை ரஷ்யா முற்றாக மறுத்துள்ளது.

உக்ரைனுக்கு எதிரான ரஷ்யப் போர் 150 நாட்களை கடந்துவிட்ட நிலையில், உக்ரைனின் கிழக்குப் பகுதி நகரங்களை கைப்பற்றும் முயற்சியில் ரஷ்யப் படைகள் தீவிரம் காட்டி வருகின்றன.


இந்நிலையில், உயர் தொழில்நுட்பம் கொண்ட அதிநவீன ஏவுகணை அமைப்பான ஹிமார்ஸ் மூலம் குறிவைத்து உக்ரைன் படை வீரர்கள் நடத்திய பதிலடி தாக்குதலில் ரஷ்யாவின் 50 ஆயுதக்கிடங்கு தகர்த்தப்பட்டதாக உக்ரைன் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் ஆயுதக் கிடங்குகள் மீதான தாக்குதல்களை நடத்துவதற்கு உக்ரைன் இராணுவம் நீண்டகாலமாக முயற்சித்து வந்தது. இதற்கு முன்னரும் பல தடவைகள் ரஷ்யா மீது தாக்குதல் நடத்தப்பட்டபோதிலும் அவை குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு வெற்றியளிக்கவில்லை.

மேலும், உக்ரைன் தாக்குதல் தொடர்பில் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி செய்திகள் வெளியிடக் கூடாதென்ற தடையும் ரஷ்யாவில் உள்ளது. ஆதலால் உண்மை நிலைவரத்தை அறிவதில் சர்வதேச ஊடகங்களுக்கு சவால்கள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில், ரஷ்யாவின் ஆயுதக் கிடங்குகள் மீது உக்ரைன் படைகள் தாக்கப்பட்டமை தொடர்பில் உக்ரைன் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இதன் காரணமாக பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

# 53 வயதில் நான்காவது திருமணம்



அமெரிக்காவில் மாத்திரமல்லாது உலகளாவிய ரீதியில் இரு தசாப்தங்களுக்கு மேலாக இளைஞர்களை வசப்படுத்தியிருந்த ஜென்னிபர் லோபெஸ், நான்காவது திருமணம் செய்யப்போவதாக அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பானது சமூக வலைத்தளங்களில் பரவலாக பேசப்படுகிறது.

ஜே.லோ என அழைக்கப்படும் ஜென்னிபர் லோபெஸ் அமெரிக்காவின் பிரபல நடிகையாவார். பின்னணிப் பாடகி, இசையமைப்பாளர், நடனக் கலைஞர், ஆடை வடிவமைப்பாளர் என பல பரிமாணங்களில் அவர் சிறந்து விளங்கி வருகிறார்.

ஏற்கனவே மூன்று திருமணங்கள் முடித்துள்ள நிலையில், நான்காவதாக திருமணம் முடிக்கப்போவதாக அவர் அறிவித்துள்ளார்.

அமெரிக்க நடிகரான பென் எப்லெக் ஐ திருமணம் செய்யப்போவதாக தெரிவித்துள்ள அவர் ஹனிமூன் செல்வதற்கான திட்டமிடல்கள் குறித்தும் அறிவித்துள்ளார்.

# வீட்டில் இரண்டு வருடங்களாக இறந்து கிடந்த பெண்

இங்கிலாந்தின் தலைநகரான லண்டனில் பெக்காம் என்னும் இடத்தில் இருக்கும் குடியிருப்பில் வசித்துவந்த 58 வயதான ஷீலா செலியோன் என்பவர் சுமார் இரண்டு வருடத்திற்கு பின்னர் இறந்த நிலையில் அவரது வீட்டிலிருந்து எலும்புக்கூடாக கண்டெடுக்கப்பட்டார்.

அவர் வசித்துவந்த வீட்டை வீட்டுவசதி சங்கம் நிர்வகித்து வந்துள்ளது. அவரின் ஒரு மாத வாடகை தாமதமான நிலையில் வீட்டுவசதி சங்கம் பெண்ணின் சமூக நலன்கள் பிரிவில் விண்ணப்பித்து அவரின் வாடகையை இரண்டு வருடங்களுக்கு மேலாகப் பெற்றுள்ளனர். இந்த நிலையில், ஜூன் 2020இல் சமையல் எரிவாயு இணைப்பைச் சோதனை செய்யவந்த போது அவர் பதிலளிக்காததால் அவர் வீட்டு எரிவாயு இணைப்பைத் துண்டித்துள்ளனர். ஆனால் ஒருவரும் வீட்டினுள் சென்று பார்க்கவில்லை.

அவரின் இறப்பின் காரணத்தைக் கண்டறியப் பிரேதப் பரிசோதனை செய்யமுடியாத வகையில் உடல் எலும்புக்கூடாக அழுகி விட்டது. அவரின் பற்களைக் கொண்டு அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டது.



சுவிட்ஸர்லாந்தின் நியோன் நகரில் இடம்பெற்ற வருடாந்த 'பாலோ' பாரம்பரிய நிகழ்வில் பெண்ணொருவரின் நடனத்தை படத்தில் காணலாம்.



இங்கிலாந்தின் ஸ்டெபல் தீவில் ஏராளமான பறவையினங்கள் ஒருவகை காய்ச்சல் காரணமாக உயிரிழக்கின்றன. அது தொடர்பில் விசேட குழு எச்சங்களை சேகரிப்பதை காணலாம். அங்கு இதுவரை 3 ஆயிரம் பறவைகளின் எச்சங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.



ரஷ்யப் படைகளின் தாக்குதல் காரணமாக உக்ரைனின் கார்கிவ் நகரில் சேதமடைந்த குடியிருப்புகளில் மீட்புப் பணிகள் இடம்பெறுகின்றன.



கலிபோர்னியாவில் பரவிய காட்டுத் தீ காரணமாக ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட வனப்பகுதி எரிந்து சாம்பராகியுள்ளது. தீயை அணைப்பதற்கு விமானப்படையினர் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

# சுறாக்கள் இருக்கும் கடலில் தவறி விழுந்த சீனப்பயணி

## 14 மணித்தியாலங்களுக்குப் பின்னர் மீட்பு




சீனாவைச் சேர்ந்த கடற்பயணி ஒருவர் சுறா மீன்கள் அதிகம் உலாவும் கடலுக்குள் கப்பலில் இருந்து தவறுதலாக விழுந்தார். இவர் 14 மணி நேரத்திற்கு பின் உயிருடன் மீட்கப்பட்டார்.

சீனாவைச் சேர்ந்த கடற்பயணி ஒருவர் சுறா மீன்கள் அதிகம் உலாவும் கடலுக்குள் கப்பலில் இருந்து தவறுதலாக விழுந்தார். இந்த சம்பவம் அவுஸ்திரேலியாவின் மேற்கு கடற்கரையை ஒட்டிய பகுதியில் நடந்துள்ளது. அவர் கிட்டத்தட்ட 12 மணி நேரத்துக்கு பின் மீட்கப்பட்டுள்ளார். ஒருநாள் இரவு முழுவதும் அவர் கடலில் தத்தளித்தபடியே உயிர் பிழைத்துள்ளார்.

சீன சரக்கு கப்பலில் இருந்து தவறி கடலில் விழுந்துள்ளார். 30 வயதான அந்த நபர் கிட்டத்தட்ட 12 மணி நேரம் கடலிலேயே தவித்துள்ளார். இந்த தகவலை அறிந்ததும் அவரை மீட்க ஹெலிகொப்டர்கள் மற்றும் கப்பலில் குழுக்கள் விரைந்தன. ஆனால் இருள் சூழ்ந்த நேரத்தில் அவர் எங்கு இருக்கிறார் என்பதை கண்டறிய முடியாமல் அவர்கள் தவித்தனர்.

இந்த நிலையில், கடற்கரையில் இருந்து 10 கிலோமீற்றர் தொலைவில் கடலில் அவர் இருப்பது கண்டறியப்பட்டது. உடனடியாக அவரை மீட்டு கரைக்கு கொண்டு வந்து முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டதன்பின்னர் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

உலக செய்திகள்

# ஆற்றில் பஸ் கவிழ்ந்ததில் 30 பேர் பரிதாபப் பலி

## கென்ய மெரு நகரில் துயரம்






கென்யாவின் கிழக்கு மாநிலத்தில் உள்ள மெரு நகரிலிருந்து கடற்கரை நகரமான மொம்பாசாவுக்கு சென்ற பஸ் ஆற்றுப் பள்ளத்தாக்கில் கவிழ்ந்ததில் 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த பஸ்ஸில் 50இற்கும் மேற்பட்டோர் பயணித்துள்ளதுடன் ஏனையோர் காயங்களுக்குள்ளான நிலையில், வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

பஸ் சாரதியின் கட்டுப்பாட்டை மீறியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக மெரு மாவட்ட ஆணையாளர் நோர்பட் கொமோரா தெரிவித்துள்ளார். மேலும், விபத்து தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். இச்சம்பவமானது, அப்பகுதியில் பெரும் சோகத்தை உண்டுபண்ணியுள்ளது.

# சென்னை வருகிறார் பிரதமர் மோடி



தமிழ்நாடு, மாமல்லபுரத்தில் நடைபெறவுள்ள, 44ஆவது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டியை தொடங்கி வைப்பதற்காக, இரண்டு நாள் பயணமாக பிரதமர் மோடி நாளை சென்னைக்கு வருகைதரவுள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில், சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி நாளை தொடங்குகிறது. இதன் தொடக்க விழா சென்னை நேரு உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியை தொடங்கிவைக்க நாளை மாலை, 4.45 மணிக்கு, குஜராத் மாநிலம் அஹமதாபாத்தில் இருந்து, இந்திய விமானப் படையின் தனி விமானத்தில், பிரதமர் மோடி சென்னை விமான நிலையத் துக்கு வரவுள்ளார்.

அங்கிருந்து மாலை ஹெலி கொப்ட ரில் புறப்பட்டு ஐ.என்.எஸ். அடையாறு செல்லவுள்ளார். அதன்பின், செஸ் ஒலிம்பியாட் போட்டி தொடக்க விழா நடைபெறவுள்ளது. நேரு உள்ளக விளையாட்டரங்கிற்கு மாலை 06 மணிக்கு சென்றடையவுள்ளதுடன் இரவு 07 மணி வரை நடைபெறும் விழாவில் பங்கேற்கவுள்ளதாகவும் ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

# வெல்லம்பிட்டியவில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபரொருவர் படுகொலை

வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒருகொடவத்த பாலத்துக்கு கீழ் நேற்று முன்தினம் (25) கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட நிலையில் பலத்த காயங்களுக்குள்ளாகிய நபரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது, காயங்களுக்குள்ளான நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதன் பின்னரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குருநியாவத்த, வெல்லம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த கொலைக்கான காரணம் இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதுடன், சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனைகள் நேற்று (26) இடம்பெற்றிருந்தன. இந்தக் கொலையை மேற்கொண்டவர்கள் தொடர்பான தகவல்கள் இதுவரையில் அடையாளங்காணப்படவில்லை என்பதுடன் அவர்களை கைதுசெய்வதற்காக வெல்லம்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# தமிழகம் வழங்கிய ரூ.3.4 பில்லியன் மதிப்புள்ள நிவாரணங்கள் கையளிப்பு




இலங்கைக்கு ரூ.3.4 பில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள மனிதாபிமான பொருட்களை தமிழக அரசு நன்கொடையாக வழங்கியுள்ளது.

கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் தனது ட்விட்டர் பக்கத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நன்கொடையாக வழங்கிய பொருட்களில் 40,000 மெட்ரிக் தொன் அரிசி, 500 மெட்ரிக் தொன் பால்மா மற்றும் 22 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள 100 மெட்ரிக் தொன் மருந்துகளும் உள்ளடங்குவதாகத் தெரிவித்துள்ளது.

இந்த நன்கொடை அமைச்சர்களான அலி சப்ரி மற்றும் கெஹேலிய ரம்புக்வெல்ல மேலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

# வர்த்தக வங்கி கடன் அட்டைகளுக்கான வருடாந்த வட்டி வீதம் அதிகரிப்பு

நாட்டிலுள்ள பல வர்த்தக வங்கிகள் கடன் அட்டைகளுக்கான வருடாந்த வட்டி வீதத்தை மேலும் அதிகரித்துள்ளன.

இதன் மூலம் கடன் அட்டைக்கான வருடாந்த வட்டி விகிதம் 36 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக வங்கிகள் தெரிவித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 08ஆம் திகதி, மத்திய வங்கியின் நாணயச் சபையானது, கடன் அட்டைகளுக்கு வழங்கப்படும் வட்டி விகிதங்களில் விதிக்கப்பட்ட உச்ச வட்டி விகிதத்தை நீக்க தீர்மானித்ததை தொடர்ந்து, வட்டி விகிதங்கள் 18 வீதத்திலிருந்து 24வீதமாகவும் அதனை தொடர்ந்து 30வீதமாகவும் இப்போது மீண்டும் 36 சதவீதமாகவும் வங்கிகள் தமது வட்டி விகிதத்தை அதிகரித்துள்ளன.

# விசேட திறன்களைக்கொண்ட இலங்கையர்களுக்கு ஜப்பானில் விவசாயத்துறையில் தொழில் வாய்ப்பு

விசேட திறன்களை கொண்ட தொழில் வேலைத்திட்டங்களின் கீழ் விவசாயத்துறையில் நாட்டின் பணியாளர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்க ஜப்பான் அரசாங்கம் இணக்கம் வெளியிட்டுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இதனைத் தெரிவித்துள்ளது.

மருத்துவ சேவைகள் மற்றும் உணவு சேவை துறைகளுக்கு மேலதிகமாக இந்த தொழில் வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

விவசாய கைத்தொழில் துறையில் தொழில் வாய்ப்புகளுக்காக ஜப்பான் மொழிப் பரீட்சைக்கு மேலதிகமாக தொழில் தகைமை அவசியமாகும்.

17 வயதுக்கு மேற்பட்ட பணியாளர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

எதிர்வரும் 29ஆம் திகதி முதல் ஓகஸ்ட், செப்டெம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் ஆகிய மாதங்களில் தகுதிகாண் பரிசோதனைகளுக்கான பரீட்சைகள் இணையம் ஊடாக இடம்பெறவுள்ளன.

இதற்கான தகவல்களை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக இணையத்தளத்தின் ஜப்பான் தொழில் வாய்ப்புகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பக்கத்திற்கு சென்று பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கம்பஹாவில் மீண்டும் கொரோனா அபாயம்

கிரிபத்கொட வைத்தியசாலை ஊழியர்களில் 07 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்கள் ராகம வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வருவதாகவும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது கம்பஹா வைத்தியசாலையில் கொரோனா தொற்றுக்குள்ளான 05பேர் சிகிச்சைப்பெற்று வருவதாகவும், பல மாதங்களாக மூடப்பட்டிருந்த கொரோனா வார்டுகளில் சிகிச்சைப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அண்மைய நாட்களில் கம்பஹா மாவட்டத்தில் இரண்டு கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளதாக சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் இருந்து கொரோனா பரவும் அபாயம் உள்ளதால், பரிந்துரைக்கப்பட்ட சுகாதாரப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுமாறு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் இந்திக்க வன்னிநாயக்க தெரிவித்துள்ளார்.

## கல்கிசையில் தசைப்பிடிப்பு மத்திய நிலையம் என்ற போர்வையில் முன்னெடுக்கப்பட்ட

# விபசார விடுதி

## பொலிஸாரினால் சுற்றிவளைப்பு

தசைப்பிடிப்பு மத்திய நிலையம் என்ற போர்வையில் முன்னெடுக்கப்பட்டு வந்த விபசார விடுதியொன்று நேற்று முன்தினம் (25) கல்கிசை பிரதேசத்தில் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கல்கிசை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய இரத்மலானை பிரதேசத்தில் தசைப்பிடிப்பு மத்திய நிலையம் என்ற போர்வையில் முன்னெடுக்கப்பட்டு வந்த விபசார விடுதியொன்று சுற்றிவளைக்கப்பட்டு, அதன் முகாமையாளர் உள்ளிட்ட எட்டு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பெண்களில் கொச்சிக்கடை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய முகாமையாளர் உள்ளிட்ட வாழைத்தோட்டம், நாரம்பனாவ, புவக்பிட்டிய, பொகவந்தலாவை, வண்ணாத்துவில்லு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 22 முதல் 52 வயதுக்கிடைப்பட்டவர்கள் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிசை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கோட்டாவுக்கு எதிராக பிரித்தானியாவில் ஆர்ப்பாட்டம்





சிங்கப்பூர் அரசாங்கம் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும் எனக்கோரி பிரித்தானியாவில் அமைந்துள்ள சிங்கப்பூர் தூதுவராலயத்திற்கு முன்பாக புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இனப்படுகொலை குற்றவாளி கோட்டாபய ராஜபக்ஷவை அவரது நாட்டு மக்களே வெளியேற்றிய நிலையில் தற்போது சிங்கப்பூரில் தங்கியுள்ளார்.

சிங்கப்பூர் அரசாங்கம் கோட்டாபய ராஜபக்ஷவை நாடு கடத்த வேண்டும் எனத் தெரிவித்தே குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதிநிதிகள், தமிழின செயற்பாட்டாளர்கள், இளையோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# முன்னைய விலைக்கு சீசன் ரிக்கெட் வாங்கியோர்

## அவற்றை பயன்படுத்தி ரயிலில் பயணிக்கலாம்

## ரயில்வே திணைக்களம் அறிவிப்பு

முன்னைய விலைக்கு பாடசாலை பருவகாலச் சீட்டைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள், அவற்றை பயன்படுத்தி தற்போது ரயில்களில் பயணிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட் டுள்ளது.

இம் மாதத்தில் இந்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக ரயில்வே பொதுமுகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

புதிய கட்டண அறிவிப்பிற்கு அமைவாக அடுத்த மாதம் முதல் மாணவர்களுக்கான பருவகாலச் சீட்டு விநியோகம் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, எந்தவொரு சிக்கலுமின்றி வழமைபோன்று ரயில் சேவைகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள் ளது.

இதேவேளை, நேற்று (26) பஸ் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே முன்னெடுக் கப்பட்டதாக இலங்கை தனியார் பஸ் உரிமையா ளர்கள் சங்கம் தெரிவித்தது.

எவ்வாறாயினும், வழமை போன்றே நேற்றும் (26) பஸ் சேவைகள் முன்னெடுக்கப்பட்டதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

பாடசாலை மாணவர்களுக்காக மேலதிக பஸ் சேவைகளை முன்னெடுத்துள்ளதாகவும் சபை மேலும் குறிப்பிட்டுள்ளது.

# கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆடை ஏற்றுமதி வருமானம் 30 வீதத்தால் அதிகரிப்பு



## பங்குதாரர்களின் சிறந்த பங்களிப்புக்கு கூட்டு ஆடை சங்கங்களின் மன்றம் பாராட்டு

ஏற்றுமதி வருமானத்தை கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது கடந்த மே மாதத்தில் ஆடை 446 அமெரிக்க டொலராக அமைந்திருந்ததுடன் அது 30 சதவீத அதிகரிப்பாக அமைந்திருந்ததை அடுத்து, கூட்டு ஆடை சங்கங்களின் மன்றம் (JAAF) தொழில்துறையில் உள்ள அனைத்து பங்குதாரர்களின் சிறந்த பங்களிப்பைப் பாராட்டியது.

நாட்டின் ஆடைத் துறையானது முன்னெப்போதுமில்லாத சவால்களை எதிர்கொண்டு அதன் இலக்குகளை அடைவதில் தொடர்ந்து தனது பங்களிப்பை வழங்கி வருவதையும் பாராட்டியுள்ளது.

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சுமார் 06 சதவீதத்தால் பங்களிப்பதோடு, அனைத்து ஏற்றுமதிகளில் ஏறக்குறைய பாதி பங்களிப்பை வழங்குவதால், ஆடைத்தொழில் தேசிய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக அமைகிறது. ஆற்றல் வழங்கல் மற்றும் உற்பத்திப் பொருள் நடவடிக்கைகளில் ஏற்படும் இடையூறுகள் காரணமாக தொழில்துறை தொடர்ந்து குறிப்பிடத்தக்க தடைகளை எதிர்கொள்வதால், துறையின் ஏற்றுமதி வருவாய் மே 2022க்குள் 16 சதவீதம் முதல் 2.2 சதவீதம் வரை வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து கருத்து தெரிவித்த கூட்டு ஆடை சங்கங்களின் மன்றத்தின் பொதுச் செயலாளர் யொஹான் லோரன்ஸ்,

“2022ஆம் ஆண்டின் இறுதிக்குள் தொழில்துறையின் இலக்கான 6 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டுவோம் என்று நம்புகிறோம். எவ்வாறாயினும், முதலில் கடக்க வேண்டிய குறிப்பிடத்தக்க சவால்கள் உள்ளன என்பதை நாங்கள் நன்கு அறிவோம். எனவே, தொழில்துறையில் செயல்பாடுகளின் தொடர்ச்சிக்கு சாத்தியமான அனைத்து ஆதரவையும் வழங்குவது முக்கியம்.

பெரிய ஆடை உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்தியைத் தக்கவைத்துக்கொள்வதை உறுதிசெய்வதைத் தவிர, அன்றாட நடவடிக்கைகளில் கடுமையான சவால்களை எதிர்கொள்ளும் தொழில்துறையின் முக்கியப் பிரிவான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆடை உற்பத்தியாளர்களுக்கான ஆதரவிற்கு முன்னுரிமை அளிப்பது அவசியம்” என அவர் தெரிவித்தார்.

நாடு தற்போது எதிர்கொள்ளும் முன்னெப்போதும் இல்லாத நிச்சயமற்ற நிலை, ஸ்திரமற்ற உலகளாவிய சந்தை நிலைமைகள் மற்றும் அதிகரித்து வரும் மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்திக்கான செலவுகள் போன்றவற்றுக்கு மத்தியிலும், இலங்கையின் ஆடைத் தொழில்துறையானது தேசிய பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது.

தற்போதைய நெருக்கடிக்கு மத்தியிலும், ஏற்றுமதி செயல்திறனில் உள்ள உயர் போக்குகள், ஜூன் 2022 வரை ஆண்டுக்கு ஆண்டு 17% வளர்ச்சியைப் பதிவு செய்தல் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் (FDI) தொடர்ச்சியான வரவு காரணமாக இலங்கையில் ஆடைகள் தொடர்பான நேர்மறையான அணுகுமுறை இன்னும் நாட்டிற்குள் காணப்படுகின்றது. 94 மில்லியன் அமெரிக்க டொலர் ஆடை முதலீட்டில், 2022ஆம் ஆண்டில் ஆடைத் துறையின் விரிவாக்கத்திற்காக இதுவரை 73 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்புள்ள முதலீடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# இலங்கை கொடியை ஏந்தும் இந்திக்க திசாநாயக்க

இங்கிலாந்தின் பேர்மிங்ஹமில் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டு விழாவுக்கான ஆரம்ப விழாவில் இலங்கையின் தேசியக் கொடியை பளுதூக்கல் வீரர் இந்திக்க திசாநாயக்க ஏந்திச்செல்கிறார்.

இலங்கை விளையாட்டு வீரர்கள் குழாத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள இந்திக்க திசாநாயக்க, நான்கு வருடங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் 2018 பொதுநலவாய விளையாட்டு விழாவில் பளுதூக்கல் நிகழச்சியில் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தார்.

பேர்மிங்ஹமில் நாளை ஆரம்பமாகவுள்ள 22ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவில் இலங்கை சார்பாக ஒரு மாற்றுத்திறனாளி உட்பட 110 வீர, வீராங்கனைகள் 14 வகையான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் 72 நாடுகளைச் சேர்ந்த சுமார் 5,000 வீர, வீராங்கனைகள் 20 வகையான விளையாட்டுப் போட்டிகளில் 280 நிகழ்ச்சிகளில் பங்குபற்றவுள்ளனர். நாளைமுதல் எதிர்வரும் ஓகஸ்ட் 8ஆம் திகதிவரை போட்டிகள் நடைபெறவுள்ளன.



# வணக்கம் சென்னை செஸ்

ஜூலை 28 முதல் சென்னையில் நடைபெற உள்ள சர்வதேச செஸ் ஒலிம்பியாட், 2022இற்கான கீதத்தை ஏ.ஆர்.ரஹ்மான் இயற்றியுள்ளார். ஒஸ்கார், கிராமி விருது பெற்ற இசையமைப்பாளர் ஒரு சிறிய ஜிக் செய்வதை வீடியோவில் காணலாம். கூவம் ஆற்றின் மீது கட்டப்பட்ட புகழ்பெற்ற நேப்பியர் பாலத்தின் மீது இசையமைப்பாளர் நடந்து செல்லும்போது அவர் உருவாக்கிய ஜிங்கிள் பீட்களுக்கு இசையமைப்பாளர் பாடி ஆடுவதை வீடியோ காட்டுகிறது. மெட்ராஸ் பல்கலைக்கழகத்தையும் தீவு மைதானத்தையும் இணைக்கும் பாலம் சதுரங்கப் பலகையைப்போன்று கருப்பொருளாக வரையப்பட்டுள்ளது.

இந்த இசை வீடியோவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினும் இடம்பெற்றுள்ளார். "நம்ம ஊரு சென்னைக்கு வருக" எனத் தொடங்கும் கிளிப், "வருக வருக, தமிழ்நாட்டுக்கு வருக" (தமிழ்நாட்டிற்கு அன்பான வரவேற்பு) அத்தகைய வார்த்தைகளுடன் முடிகிறது.

எவ்.ஐ.டி.ஈ. 1927இல் லண்டனில் முதல் அதிகாரப்பூர்வ ஒலிம்பியாட் போட்டியை ஏற்பாடு செய்தது. டுபாய் மற்றும் மணிலாவுக்குப் பிறகு ஆசிய நாடொன்று இந்த நிகழ்வை நடத்துவது இது மூன்றாவது முறையாகும். முதலில், ரஷ்யா இந்த நிகழ்வை நடத்துவதாக இருந்தது. ஆனால் நடந்துகொண்டிருக்கும் ரஷ்யா - உக்ரைன் போர் காரணமாக அது இந்தியாவுக்கு மாற்றப்பட்டது.

ஜூலை 26 முதல் ஓகஸ்ட் 8 வரை மொஸ்கோ மற்றும் காந்தி-மான்சிஸ்கில் ஒலிம்பியாட் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. விஸ்வநாதன் ஆனந்த், மேக்னஸ் கார்ல்சன் இடையேயான ஒரு மறக்கமுடியாத போட்டியைக் குறிக்கும் 2013 உலக சம்பியன்ஷிப் போட்டிக்குப் பிறகு இந்தியாவில் நடைபெறும் இரண்டாவது பெரிய உலக நிகழ்வாக இது குறிக்கப்படும்.

யுனெஸ்கோவின் பாரம்பரிய நகரமான மாமல்லபுரத்தில், சென்னையிலிருந்து 50 கிலோமீற்றர் தொலைவில் இந்த விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. ஓகஸ்ட் 10ஆம் திகதிவரை நடைபெறும் இந்தப் போட்டி 180 நாடுகளிலிருந்து 2,000இற்கும் மேற்பட்ட பார்வையாளர்களை ஈர்க்குமென எதிர்பார்க்கப்படுகிறது.



# மூன்று உலக சாதனைகளுடன் நிறைவடைந்த உலக தடகள சம்பியன்ஷிப்

## சொந்த மண்ணில் முதலிடத்தை கைப்பற்றிய அமெரிக்கா

## முதல் சுற்றுகளுடன் வெளியேறிய இலங்கை வீரர்கள்

## அடுத்த தொடர் 2023 ஓகஸ்ட் ஹங்கேரியில்




WORLD ATHLETICS CHAMPIONSHIPS OREGON22




அமெரிக்காவின் ஒரிகொனில் நிறைவுக்குவந்த உலக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரில் பதக்கப்பட்டியலில் தொடரை நடத்திய அமெரிக்கா 13 தங்கம், 9 வெள்ளி, 11 வெண்கலம் என 33 பதக்கங்களுடன் மீண்டும் முதலிடத்தைக் கைப்பற்றியது.

கடந்த 15ஆம் திகதிமுதல் 24ஆம் திகதிவரை நடைபெற்ற 'ஒரிகொன்-22' உலக தடகள சம்பியன்ஷிப் தொடரில் மூன்று உலக சாதனைகள் நிலைநாட்டப்பட்டன. பெண்கள் பிரிவில் 2 உலக சாதனைகளும், ஆண்கள் பிரிவில் ஒரு உலக சாதனையும் நிலைநாட்டப்பட்டன.

தொடரில் இலங்கை சார்பாக பங்குபற்றிய மூவரும் முதல் சுற்றுகளுடன் வெறியேறினர். ஆண்களுக்கான 100 மீற்றர் திறன்காண் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய யுப்புன் அபேகோன் (10.19 செக்.) ஒட்டுமொத்த நிலையில் 30ஆவது இடத்தைப் பெற்று வெளியேறினார். பெண்களுக்கான 3,000 மீற்றர் தடை தாண்டும் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய நிலானி ரட்நாயக்க (9:54.10) ஒட்டுமொத்த நிலையில் 39ஆவது இடத்தைப் பெற்றார். பெண்களுக்கான 800 மீற்றர் திறன்காண் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய கயன்திகா அபேரட்ன (2:02.35) ஒட்டுமொத்த நிலையில் 29ஆவது இடத்தைப் பெற்றார்.

போட்டியின் முடிவில் பதக்கப்பட்டியலில் அமெரிக்கா 13 தங்கம், 9 வெள்ளி, 11 வெண்கலம் என 33 பதக்கங்களுடன் மீண்டும் முதலிடத்தை சொந்தமாக்கியது. எத்தியோப்பியா 4 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கத்துடன் 2ஆவது இடத்தையும், ஜெமெய்க்கா 2 தங்கம், 7 வெள்ளி, 1 வெண்கலப் பதக்கங்களுடன் 3ஆம் இடத்தையும் பெற்றன.




அடுத்த உலக தடகள சம்பியன்ஷிப் தொடர், ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் அடுத்த ஆண்டு (2023) ஓகஸ்ட் 19ஆம் திகதிமுதல் 27ஆம் திகதிவரை நடக்கிறது. போட்டி நிறைவு விழாவில், 19ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டியை நடத்தும் ஹங்கேரி தடகள சம்மேளனத் தலைவர் மிக்லோஸ் குலாயிடம் போட்டிக்குரிய கொடியை, உலக தடகள சம்மேளனத் தலைவர் செபாஸ்டியன் கோ முறைப்படி வழங்கினார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# கபடி விளையாடும்போது உயிரிழந்த 22 வயது இளைஞன்



இந்தியாவின் தமிழக மாவட்டம் கடலூரில் கபடி போட்டியில் விளையாடிய கல்லூரி மாணவர், களத்திலேயே மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



கடலூர் மாவட்டம் மானடிக் குப்பத்தில் கபடி போட்டி அண்மையில் நடந்தது. இதில் பெரியபுறங்கணி கிராமத்தைச் சேர்ந்த 22 வயதுடைய விமல்ராஜ் என்பவர் தனது நண்பர்களுடன் போட்டியில் கலந்துகொண்டார். சிறப்பாக விளையாடிய அவர், எதிரணி வீரர்களிடமிருந்து தப்பிக்க தாவிக்குதித்து எல்லைக் கோட்டை தொட்டார். அவரை வீரர் ஒருவர் மடக்கினார். அப்போது திடீரென மயங்கி விழுந்த விமல்ராஜை பார்த்து பலரும் அதிர்ச்சியடைந்தனர்.

உடனடியாக அவரது நண்பர்கள், போட்டி நடுவர் உள்ளிட்ட அனைவரும் விமல்ராஜை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள், ஏற்கனவே விமல்ராஜ் உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். இதுகுறித்து தகவல் அறிந்த பொலிஸார் மாணவரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். அதனைத் தொடர்ந்து விமல்ராஜின் தந்தை செல்வம் கொடுத்த புகாரின்பேரில் பொலிஸார் வழக்குப் பதிவுசெய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# 323 ஓட்டங்களினால் முன்னிலை வகிக்கும் இலங்கை அணி



பாகிஸ்தான் அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டம் போதிய வெளிச்சம் இன்மை காரணமாக நேற்று சற்று முன்னதாக நிறைவுக்கு வந்த நிலையில், ஆட்டநேர முடிவில் இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் 323 ஓட்டங்களுடன் முன்னிலை வகிக்கிறது.

378 ஓட்டங்கள் என்ற இலங்கை அணியின் முதல் இன்னிங்ஸ் துடுப் பாட்டத்தை பதிலுக்கு துரத்திய பாகிஸ்தான் அணி, தங்களது முதல் இன்னிங்ஸில் 231 ஓட்டங்களுக்கு சுருண்டு போனது. பந்துவீச்சில் ரமேஷ் மெண்டிஸ் 47 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களையும், பிரபாத் ஜெயசூரிய 3 விக்கெட்களையும், அசித்த பெர்னான்டோ மற்றும் தனஞ்ஜய டி சில்வா ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் வீழ்த்தினர்.

அந்தவகையில் 147 ஓட்டங்கள் முன்னிலையில் 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி, நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 5 விக்கெட்களை இழந்து 176 ஓட்டங்களை குவித்தது. இன்னும் 5 விக்கெட்கள் கைவசமிருக்கும் நிலையில், 323 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி முன்னிலை பெற்றுள்ளது. ஆடுகளத்தில் திமுத் கருணாரத்ன 27 ஓட்டங்களுடனும், தனஞ்ஜய டி சில்வா 30 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர். இன்று போட்டியின் 4ஆவது நாள் ஆட்டம் சற்று முன்னதாக 9.35 மணிக்கு ஆரம்பமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.




# திரைப்படமாகிறது பாக். வீரர் அக்தரின் வாழ்க்கை வரலாறு




பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் சோயிப் அக்தரின் வாழ்க்கை வரலாறு 'ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ்' என்ற பெயரில் படமாக எதிர்வரும் 2023 நவம்பரில் வெளியாகிறது.

பாகிஸ்தான் அணிக்காக 46 டெஸ்ட், 163 ஒருநாள் மற்றும் 15 இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடி முறையே 178, 247 மற்றும் 19 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தியுள்ளார் அக்தர். இவரின் விக்கெட் வீழ்த்தும் திறனை விட இவர் வீசும் பந்தின் வேகத்தைக் கண்டு முன்னணி கிரிக்கெட் ஜாம்பவான்கள் கூட அஞ்சியுள்ளனர். குறிப்பாக, 2002ஆம் ஆண்டு நியூசிலாந்து அணிக்கு எதிராக 161 கிலோ மீற்றர் வேகத்தில் அக்தர் வீசிய பந்துதான் தற்போதுவரை கிரிக்கெட்டில் வீசப்பட்ட வேகமான பந்தாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், தற்போது இவரின் வாழ்க்கை வரலாறு 'ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ்' என்ற பெயரில் திரைப்படமாக எடுக்கப்படுகிறது. இந்த திரைப்படத்தை முஹம்மது ஃபராஸ் கெய்சர் என்பவர் இயக்குகிறார். சோயிப் அக்தர் பாகிஸ்தானின் ராவல்பிண்டி என்ற இடத்தில் பிறந்ததாலும், அதிவேகமாக பந்து வீசியதாலும், இவர் ஏற்கனவே 'ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ்' என்ற பெயரால் அறியப்பட்டவர். இந்நிலையில்,அதே பெயரில் இவரின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாகிறது.

இது குறித்த அறிவிப்பை சோயிப் அக்தர் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். படத்தின் 'பர்ஸ்ட் லுக்-கை' பகிர்ந்துள்ள அவர், "பாகிஸ்தானைச் சேர்ந்த விளையாட்டு வீரரைப் பற்றிய முதல் வெளிநாட்டுப் படம்" என பதிவிட்டுள்ளார்.

இந்தத் திரைப்படம் 2023 நவம்பர் 16ஆம் திகதி திரைக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7